REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 17

செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :65 சித்திரை 27 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 10 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## கொரோனா 847

கொழும்பு, மே 10

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 23 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள னர். 02

## முதல் நோயாளியைத் தவிர ஏனையோர் யாழில் நலம்

யாழ்ப்பாணம், மே 10

வெலிகந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் நேற்றைய தினம் வீடுகளுக்குத் திரும்பியதாக 02

## 94 பேருக்குச் சோதனை எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத் தில் 53 பேருக்கும், யாழ். போதனா மருத்து வமனையில் 41 பேருக்குமாக 94 பேருக்கு நேற்று முன்னெடுக்கப்பட்ட கொரோனாத் தொற்றுச் சோதனையில் எவருக்கும் தொற் றில்லை என்று உறுதிப்படுத்தப்பட் 02

# கூட்டமைப்புக்காக தமிழீழத்தை தாரைவார்க்கோம்!



## ராஜபக்சக்களின் சகா விமல் கூறுகிறார்

கொழும்பு, மே 10

நாட்டின் நலன்கருதி நெருக்கடியான சூழ்நிலையில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க தமிழ்த் தேசியக் கூட் டமைப்பினர் முன்வந்தமைக்காக அவர்களின் வடக்கு, கிழக்கு இணைப்புக் கனவை – சமஷ்டிக் கோட்பாட்டை – பிரபாகர னின் தமிழீழ இலட்சியத்தை அரசு நிறைவேற்றும் என்று எவரும் தப்புக்கணக்குப் போடக்கூடாது. எந்தச் சந்தர்ப்பத் திலும் அதை நாம் வழங்கவே மாட்டோம். எமது படையின ரின் தியாகத்தை நாம் கொச்சைப்படுத்தவே மாட்டோம். இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார். 02



## அரசியல் தீர்வே தமிழருக்கு முக்கியம்

# இனவாதிகளின் வாய்களை அடக்குவது அரசின் பொறுப்பு

### மஹிந்தவிடம் சுட்டிக்காட்டினோம் என்கின்றனர் சம்பந்தன், மாவை

கொழும்பு, மே 10

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். அதில் புதிய அரசமைப்பின் ஊடாக அரசியல் தீர்வு காணப்படவேண் டும் என்பது மிக முக்கியம். இதைப் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் நடத்திய பேச்சின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரிவாக எடுத்துரைத்துள்ள 02

## யாழ். நகருக்குள் நுழைய கட்டுப்பாடுகள் தொடரும்

### மாவட்டச் செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாண நகருக்குள் அதிகளவான பொதுமக் கள் ஒன்றுகூடுவதைத் தவிர்ப்பதற்காக பொலி ஸார் முன்னெடுத்துவரும் வீதித் தடை செயன் முறை தொடர்ந்தும் இடம்பெறும் என்று யாழ்ப் பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகே சன் தெரிவித்தார். 2A

## விஸா கால எல்லை நீடிப்பு

கொழும்பு, மே 10

கொரோனா வைரஸ் பரவல் கருதி, இலங்கை யில் தற்போது வசிக்கும் வெளி நாட்டவருக்கான அனைத்து வகை யான 2A

## வீட்டுக்குள் புகுந்த குழு அட்டகாசம்

யாழ்ப்பாணம்,மே 10

வீடொன்றுக்குள் புகுந்த குழுவினர், வீட்டிலிருந்த பொருள்களை அடித்து நொருக்கியதுடன், வீட்டிலி ருந்தவர்களை அச்சுறுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள் ளனர்.

இந்தச் சம்பவம் 02

## ரியூசன்களை திறக்க அனுமதி கிடையாது!

### மீறினால் சிறைதான் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

நாளையிலிருந்து இயல்பு நிலைக்குத் திரும்புவதால் சில தனியார் கல்வி நிறுவனங்களும், குழு வகுப்புக் களை நடத்துபவர்களும் தமது கற்பித்தல் நடவடிக் கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் கிடைத் துள்ளன. 02

## மாகாணத்தின் உள்ளே 'பாஸ்' தேவையில்லை!

யாழ்ப்பாணம், மே 10

ஊடரங்கு தளர்த்தப்பட்ட பின்னர் மாகா ணத்துக்குள்ளான போக்குவரத்துக்கு பாஸ் தேவையில்லை என்று யாழ்ப்பா 2A

## தனியார் போக்குவரத்து சேவையை நடத்துவது கடினம்

### பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

கொரோனா பாதுகாப்புக்காக அரசு அறிவித்துள்ள கட்டுப்பா டுகளைப் பின்பற்றி எம்மால் போக்குவரத்துச் சேவையை நடத்த முடியாது. எமக்குப் பெரும் நட்டமே ஏற்படும். இவ் வாறு தனியார் பேருந்து உரி மையாளர் சங்கத்தினர் தெரி வித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவ 2A

## முதலாவது சிப்பாய் குணமடைவு

கொழும்பு, மே 10

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலை யில் அடையாளம் காணப் பட்ட பொலன 02

## 4 பிரதான சந்தைகளையும் மைதானங்களுக்கு மாற்றுக

### யாழ். மாவட்டச் செயலக கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள திருநெல்வேலி, மருத னார்மடம், சுன்னாகம், சாவகச்சேரி சந்தைகளை அந் தச் சந்தைகளுக்கு அருகிலுள்ள மைதானங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவும். அ 02

## இ.போ.ச சேவைகளை அதிகரிக்க வேண்டும்

### யாழ். மாவட்டச் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

ஊரடங்கு தளர்த்தப்படும் போது அதிகள வான பேருந்துச் சேவையை நடத்துமாறு இலங்கைப் போக்குவரத்துச் 2A

## கொரோனா...

நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் கொரோனாத் தொற்றுடன் 11 அடையாளம் காணப்பட்டனர் என்று சுகாதார அமைச்சு நேற்றுக் காலை அறிவித்திருந்தது. அதற்கமைய கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 824 இலிருந்து 835 ஆக அதிகரித்திருந்தது.

நேற்றுமுன்தினம் இரவு கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட 11 பேரும் வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்தவர்கள் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், நேற்று மாலை மேலும் 12 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்து கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 835 இலிருந்து 847 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 15 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர். குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 240 இலிருந்து 255 ஆக உயர்ந்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 844 பேரில் தற்போது 583 நோயாளிகள் 7 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதனிடையே மேலும் 135 பேர் 24 வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (எ-22)

## முதல்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 15 பேரும், வவுனியாவைச் சேர்ந்த ஒருவருமாக 16 பேர் கொரோனாத் தொற்றிலிருந்து சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களில் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அதில் தாவடியைச் சேர்ந்தவர் முதலாவது நோயாளியாக அடையாளம் காணப்பட்டு மார்ச் மாதம் 23ஆம் திகதி கொழும்பு தேசிய தொற்று நோய் மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தார். அவர் மட்டும் இன்னும் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதன் பின்னர் ஏனைய 16 பேரும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டு இரணவில, வெலிகந்த மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் 16 பேரும் சிகிச்சை முடிவடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## 94 பேருக்கு...

டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சந்தேகத்தில் சேர்க்கப்பட்ட 2பேர், வெளிநோயாளர் பிரிவில் மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்பட்ட 6பேர், வவுனியா பொது மருத்துவமனையில் சந்தேகத்தில் சேர்க்கப்பட்ட ஒருவர், சண்டிலிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில் 26 பேர், முல்லைத்தீவு சுகாதார அதிகாரி பிரிவில் ஒருவர், புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேர், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 15 பேர், இரணைமடு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து 33 பேர் என்று 94 பேருக்கு சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. (ஒ,5)

## கூட்டமைப்புக்காக...

அவர் மேலும் தெரிவித்ததாவது தற்போதைய எதிர்க்கட்சிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வித்தியாசமானது. நாட்டைப் பற்றியும் மக்களின் நலனைப் பற்றியும் கூட்டமைப்பினர் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். நெருக்கடியான நிலையில் அரசின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க அவர்கள் முன்வந்தமை வரவேற்கத்தக்கது. ஆனால் அவர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் அரசால் நிறைவேற்றவே முடியாது. புதிய அரசமைப்பு விடயம் தொடர்பில் புதிய நாடாளுமன்றத்தில் அரசு அலசி ஆராயும். எனினும் கூட்டமைப்பினர் விரும்பும் சமஷ்டிக்கு இங்கு ஒருபோதும் இடமே இல்லை.

இந்தநாட்டில்ஒற்றையாட்சிதான்தொடர்ந்து இருக்கும். அதனூடாகத்தான் சகலரும் ஏற்கும் அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்க முடியும். இந்த நிலைப்பாட்டிலிருந்து ராஜபக்ச அரசு ஒருபோதும் பின்வாங்கவேமாட்டாது என்றார். (எ-22)

## இனவாதிகளின்...

து. தீர்வுத் திட்டத்தை முன்னெடுக்கும் சந்தர்ப்பத்தில் அரசின் ஆதரவுடன் இயங்கும் இனவாதிகள் அதனைக் குழப்பியடிக்கும் விதத்தில் கருத்துக்களை வெளியிடுவார்கள். எனவே, அவர்களின் வாய்களை அடக்குவது அரசின் பொறுப்பு என்பதையும் பிரதமரிடம் நாம் சுட்டிக்காட்டினோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் 'உதயனிடம்' கூட்டாகத் தெரிவித்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்திய சந்திப்பு மற்றும் அது தொடர்பான விமர்சனங்கள் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமருடன் நாம் நடத்திய பேச்சு ஆரோக்கியமானதாக இருந்தது. அது எமக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருந்தது. எனினும், கடந்த கால கசப்பான வரலாற்றையும் நாம் மறக்கமாட்டோம். நாம் வலியுறுத்த வேண்டிய விடயங்கள் அனைத்தையும் பிரதமரிடம் நேரில் வலியுறுத்தியுள்ளோம். அத்துடன் எமது கோரிக்கைகள் அடங்கிய எழுத்து மூல மனுவையும் பிரதமரிடம் நேரில் சமர்ப்பித்துள்ளோம்.

எமது கோரிக்கைகளில் அரசியல் தீர்வு முக்கியம் என்பதையும் பிரதமரிடம் எடுத்துரைத்துள்ளோம். கடந்த ஆட்சியில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசமைப்புப் பணிகள் எதிர்ப்புகளால் இடைநிறுத்தப்பட்டன. எனவே, அந்தப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் பிரதமரிடம் சுட்டிக்காட்டினோம்.

அரசியல் தீர்வு, அரசியல் கைதிகள் விடுதலை உட்பட நாம் முன்வைத்த கோரிக்கைகள் எவற்றையும் பிரதமர் நிராகரிக்கவில்லை. அவற்றை சாதகமாகப் பரிசீலிப்பதாக அவர் வாக்குறுதியளித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருக்கின்றார் போல் தென்படுகின்றது. எனினும், அவரின் வாக்குறுதிகள் செயல் வடிவில் நிறைவேறும்போதுதான் அதை நாம் வரவேற்கலாம். அதுவரை நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவுடனான எமது சந்திப்பு தொடர்பில் சில தரப்பினர் கண்டபடி விமர்சிக்கின்றார்கள். இந்த விமர்சனங்கள் வரும் என்று எமக்கு முன்னரே தெரியும். தமிழ் மக்கள் நலனில் நாம் அக்கறையுடன் தொடர்ந்து செயற்படுவோம். தீர்வு கிடைக்கும்வரை எமது அர்ப்பணிப்புகள் தொடரும் என்றனர். (ஒ,5,22)

## ரியூசன்களை...

எந்தவொரு வகுப்புக்களையும் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அதையும் மீறி யாராவது செயற்பட்டால் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு கீழ் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குமாரவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நிலைமைகளைப் பொறுத்தே தனியார் கல்வி நிறுவனங்களை ஆரம்பிப்பது தொடர்பில் ஆராய முடியும். அதேபோன்றுதான் தனியார் பல்கலைக்கழகங்களும். தற்போதைய சூழலில் எவருக்கும் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குரிய அனுமதி வழங்கப்படவில்லை. அதனையும் மீறி ஆரம்பித்தால், சிறைத் தண்டனைதான் அனுபவிக்க நேரிடும் என்றார் சுகாதார சேவைகள் பணிப்பாளர். (ஒ,5)

## வீட்டுக்குள்...

வயாவிளான் குரும்பசிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடந்துள்ளது. நள்ளிரவு பதினொரு மணியளவில் வீடு புகுந்த நபர்கள்,வீட்டில் இருந்தவர்கள் தூங்கிக் கொண்டிருந்த நேரம் பார்த்து வீட்டு மின் குமிழ்களை முதலில் அடித்து உடைத்துள்ளனர்.

பின்னர் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளையும் ,அதனைத் தொடர்ந்து வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து உடைத்து நொருக்கிவிட்டு அங்கிருந்து அகன்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## முதலாவது....

றுவையைச் சேர்ந்த முதலாவது கடற்படைச் சிப்பாய் உட்பட மேலும் 5 கடற்படையினர் குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து நேற்று வெளியேறினர்.

தொற்றுக்குள்ளான முதலாவது கடற்படை சிப்பாய் விடுமுறையில் இருந்த போது, காய்ச்சல் காரணமாக பொலனறுவை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதோடு, அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் மூலம் அவர் கொரோனாத் தொற்றுக்குள்ளானார் என்று அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, மேலதிக சிகிச்சைக்காக வெலிகந்தை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

ஏனைய கடற்படையினர் 4 பேருக்கும் கொரோனாத் தொற்று அடையாளம் காணப்பட்ட நிலையில், சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார மருத்துவமனை மற்றும் கொழும்பு தேசிய தொற்று நோயியல் மருத்துவமனை ஆகியவற்றில் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவமனைகளில் அவர்கள் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகளுக்கு அமைய, வைரஸ் அவர்களது உடம்பிலிருந்து முற்றாக நீங்கிவிட்டது என்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் மருத்துவமனையிலிருந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, கடற்படையினர் 21 பேர் இதுவரையில் குணமடைந்து மருத்துவமனைகளிலிருந்து வெளியேறியுள்ள போதிலும், அவர்கள் அனைவரையும் சுகாதார ஆலோசனைகளுக்கு அமைய 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்த கடற்படையினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22)

## 4 பிரதான....

த்துடன் வீதிகளில் சந்தை விற்பனை இடம்பெறும்போதும் உள்ளூராட்சி சபைகள் அதனைக் கண்காணிக்க வேண்டும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயல்புநிலையை ஏற்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் சந்தைகள் திறக்கப்படாது. தற்போது சந்தைகளுக்கு அருகில் வீதிகளில் வைத்து அவற்றை விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் அங்கு தனியாள் இடைவெளி பேணப்படவில்லை. மக்கள் கூட்டம் கூட்டமாக வருகின்றார்கள். வீதிகளில் விற்பனை இடம்பெற்றாலும் அங்கும் சமூக இடைவெளி பேணக் கூடியவாறு இடங்களை அடையாளப்படுத்தி வழங்க உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் மிக முக்கிய சந்தைகளான சாவகச்சேரி, திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம் சந்தைகளை அவற்றுக்கு அருகில் உள்ள வீதிகளில் வைத்து நடத்தாமல், மைதானங்களில் வைத்து நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். திருநெல்வேலிச் சந்தையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்துக்கு மாற்றுவது தொடர்பான யோசனை உள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானம் வழங்கப்படாது என்ற தகவல் கலந்துரையாடலின்போது முன்வைக்கப்பட்டது. திருநெல்வேலிச் சந்தையை திறந்து அங்கு 50 சதவீதமான வியாபாரிகளுக்கு மாத்திரம் ஒரு நாள் இடம்கொடுப்பது மறுநாள் எஞ்சிய 50 சதவீதமான வியாபாரிகளுக்கு இடம் கொடுப்பது என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்ற யோசனை நல்லூர் பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டது. சந்தைக்கு வரும் மக்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படாது என்பதால் அந்த யோசனை பொருத்தமற்றது என்று கூறப்பட்டது. மைதானங்களை கண்டறிந்து அங்கு சந்தைகளை நகர்த்துவதே பொருத்தம் என்று தீர்மானிக்கப்பட்டது.

சந்தைகள் எப்படி திறக்கப்பட்டாலும் மக்களை அனுமதிப்பதில் கட்டுப்பாடுகள் தேவை என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமது அதிகாரத்துக்கு உட்பட்ட சந்தைகளை திறப்பது தொடர்பான திட்டத்தை, சுகாதார மருத்துவ அதிகாரிகளுடன் இணைந்து தயாரிக்க வேண்டும் என்று யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். (ஒ,5)

# சிவில் உடையில் சென்ற பொலிஸுடன் முரண்பாடு

## சண்டிலிப்பாயில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 10
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சண்டிலிப்பாய் பகுதியில் வீடொன்றில் இருந்தவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் பொலிஸாரும், வீட்டிலிருந்தவர்களும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது.
அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் உள்ளவர்களுக்கும், அயல் வீட்டினருக்கும் நீண்டகாலமாக முரண்பாடு இருந்துள்ளது. அதே வேளை அயல் வீட்டினருக்கும், பொலிஸாருக்கும் இடையே சுமுகமான உறவு இருந்துள்ளது. நேற்று அயல் வீட்டுக்கு சிவில் உடையில் வந்த இரு பொலிஸார் அங்கிருந்து உரையாடியுள்ளனர். அதன்பின்னர் மற்றைய வீட்டுக்குள் அவர்கள் வேலி வழியாக நுழைந்துள்ளனர்.
அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு வயதான தாயும், மகளும் மட்டும் இருந்துள்ளனர். குடும்பத் தலைவரும், மகனும் காய்கறி வியாபாரத்துக்குச் சென்றுள்ளனர்.
வீட்டுக்கு வந்த பொலிஸார் "அயல் வீட்டில் உள்ளவர்களது கைபேசியை உங்களது தம்பி திருடியுள்ளார் அதனைத் தாருங்கள்" என்று கேட்டனர். அதற்கு அவர்கள் அப்படி எந்த கைப்பேசியும் இல்லை என்று கூறினர்.
அதையடுத்துப் பொலிஸாருக்கும் அவர்களுக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டு பொலிஸார் அவர்களை தாக்கினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது தொடர்பாக வீட்டிலிருந்த பெண் தனது சகோதரனுக்கு கைபேசி மூலம் தகவல் வழங்கினார். தகவல் அறிந்தவுடன் தந்தையும் மகனும் சம்பவம் நடந்த இடத்துக்கு வந்து பொலிஸாருடன் முரண்பட்டனர். இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது. இதனால் பொலிஸாரும், வீட்டிலிருந்தவர்களும் காயமடைந்தனர்.
சம்பவத்தை அறிந்த ஊர் இளைஞர்கள் ஒன்றுகூடினர்.
அதனைத் தொடர்ந்து அம்புலன்ஸுக்கு அந்த வீட்டு இளைஞன் அழைப்பை மேற்கொண்டார். பொலிஸாரும் பொலிஸ் நிலையத்துக்கு அழைப்பை மேற்கொண்டனர். அம்புலன்ஸும் பொலிஸ் வாகனமும் சம்பவ இடத்துக்கு வந்தன.
அம்புலன்ஸில் பொலிஸாரை ஏற்றிவிட்டு, வீட்டிலிருந்த நால்வரையும் பொலிஸ் வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்ற பொலிஸார், பின்னர் அவர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.
பின்னர் தந்தை, தாய், மகள் மூவரும் மீண்டும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்றும் மகன் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ)



# திருட்டுக் குற்றச்சாட்டு: பெண்கள் இருவர் கைது

வவுனியா,மே 10
வவுனியா நகரத்தின் பிரபலமான தனியார் வர்த்தக நிலையத்தில் பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
வவுனியா மகாரம்பைக்குளத்தைச் சேர்ந்த பெண்கள் மூவர் பல வியாபார நிலையங்களில் திருட்டுக்களில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
அவர்களால் திருடப்பட்ட சுமார் இரண்டு லட்சத்துக்கு அதிகமான பொருள்கள் பாடசாலை ஒன்றின் மலசலகூடத்திலும், தாய் சேய் நலக் கட்டடத்திலும் பதுக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. பொருள்கள் அனைத்தும் மகாரம்பைக்குளம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.
வியாபார முகாமையாளரால் வவுனியா பொலிஸாரிடம் கொடுக்கபட்ட சி.சி.ரிவி. காணொலி ஆதாரத்துடன், பெண்கள் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை மகாரம்பைகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(கு222)

# மோட்டார் திருட்டு: இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 10
அராலி தெற்கு, கரைப்பிட்டிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடொன்றில் மின் மோட்டார் திருடினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சில தினங்களுக்கு முன்னர் இந்தத் திருட்டு நடந்துள்ளது. வீட்டின் உரிமையாளர் பிறிதொரு இடத்தில் வசிக்கின்றார். வீட்டைக் கண்காணிப்பதற்காக இடையிடையே வருவது வழக்கம். அவ்வாறு அவர் வந்தபோது வீட்டில் இருந்த மோட்டார் திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. அதையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸில் அவர் முறைப்பாடு செய்துள்ளார். விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 22 வயது இளைஞர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். திருடப்பட்ட மோட்டார் விற்பனைக்காக பிறிதொரு வீட்டில் இருந்த நிலையில் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்த வீட்டைச் சேர்ந்தவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(ஏ)

### தனியார்...

ட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி விடயத்தை அவர்கள் முன்வைத்தனர்.
கடந்த இரண்டு மாதங்களாக தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெறவில்லை. தனியார் பேருந்துகளில் உள்ள ஆசனங்களைவிடக் குறைவான பயணிகளை மாத்திரமே ஏற்ற முடியும் என்று அரசு கட்டுப்பாடு விதித்துள்ளது. அப்படி பயணிகளை ஏற்றி சேவையில் ஈடுபடுவது என்றால் எமக்கு நட்டமே ஏற்படும்.
இதற்காக ஜனாதிபதியிடம் எமக்கு மானியம் வழங்குமாறு கோரியிருந்தோம். அதற்கு இதுவரைபதில்கிடைக்கவில்லை. எம்மால், நாளை ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் போக்குவரத்துச் சேவையை நடத்த முடியாது.
இதேவேளை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் உரிய தரப்பின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக, மாவட்டச் செயலர் தெரிவித்தார். (ஒ,5)

### மாகாணத்தின்...

ண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் போக்குவரத்துச் சேவை கட்டுப்பாடுகளுடன் இடம்பெறும். மாகாணங்களுக்குள் போக்குவரத்துச் சேவை நடத்தப்படும். மாகாணத்தினுள் ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்துக்குச் செல்வதற்கு, சுகாதார மருத்துவ அதிகாரியின் சான்றிதழ் அல்லது பொலிஸாரின் அனுமதி எதுவும் தேவையில்லை, என்றும் மாவட்டச் செயலர் குறிப்பிட்டார். (ஒ,5)

### விஸா....

விஸாக்களினதும் செல்லுபடியாகும் காலம் ஜூன் மாதம் 11ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் விடுத்துள்ள அறிவித்தலிலேயே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.
அனைத்து விஸா விண்ணப்பதாரிகளும் ஜூன் மாதம் 1ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் eservices.immigration.gov.lk/vs எனும் இணையத்தளத்தில் முற்பதிவு செய்து நேரமொன்றை ஒதுக்கிக் கொண்டு வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
உரிய வகையில் நேரத்தை ஒதுக்கிக் கொள்ளாதவர்கள் திணைக்கள வளாகத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
உரிய விஸாக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் தமது கடவுச்சீட்டில் வீசாவை புறக்குறிப்பு இட்டுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த மார்ச் 7ஆம் திகதிக்கும் ஜூன் 11ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் காலவதியாகும் எல்லா விஸாக்களுக்கும் தண்டப்பணம் அறிவிடப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுவதாகவும் அதில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,22)

### யாழ். நகருக்குள்...

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு கூறினார்.
யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தக நிலையங்களுக்காக அதிகளவு பொதுமக்கள் நகருக்குள் பிரவேசிக்கின்றனர். அவர்களைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குகள் கடந்த காலங்களில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அந்த நடைமுறைகள் நாளை திங்கட்கிழமையிலிருந்தும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.
மேலும் யாழ்ப்பாணப் பிரதேச செயலர் மற்றும் மாநகர ஆணையாளர் இணைந்து, யாழ். நகருக்கு வருபவர்களுக்கான தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் நகருக்குள் நெருக்கடியைக் குறைப்பதற்காக புதிதாக ஒருவழிப் பாதைகளை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்டச் செயலர் கேட்டுக் கொண்டார்.
நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் தமது கடைக்குள் ஒரே நேரத்தில் அதிகளவான மக்களை வைத்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதிப்பது தவறானது. தனியாள் இடைவெளியைப் பேணக் கூடியவாறானளவு மக்களையே வர்த்தக நிலையங்களுக்குள் அனுமதிக்க வேண்டும் என்றும் மாவட்டச் செயலர் குறிப்பிட்டார். (ஒ,5)

### இ.போ.ச....

சபையிடம் மாவட்டச் செயலர் க. மகேசன் கோரிக்கை முன்வைத்தார்.
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு கேட்டுக் கொண்டார்.
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் சேவைகளை முன்னெடுக்க வேண்டும். ஓர் ஆசனத்தில் ஒருவர் மாத்திரமே அமரக் கூடியதாக பயணிகளை ஏற்ற வேண்டும். சாரதி எப்போதும் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். நடத்துநர் முகக் கவசம் மற்றும் கையுறை அணிந்திருக்க வேண்டும். பயணிகள் அனைவரும் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். பேருந்து சேவையை ஆரம்பிக்க முன்னரும், சேவை முடிவடைந்து அடுத்த சேவைக்கு முன்னரும் கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.
பேருந்தில் வேலைக்குச் செல்பவர்களையும், மருத்துவமனைக்குச் செல்பவர்களையும் ஏற்ற வேண்டும். அத்தியாவசிய சேவைக்குச் செல்வோரை ஆசன வசதிக்கு ஏற்பவே ஏற்ற முடியும் என்று மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.
இதன்போது கோப்பாய் பிரதேச செயலர், வடமராட்சியிலிருந்து தமது பணிமனைக்கு 20 ஊழியர்கள் வரையில் வருவதாகவும் காலையில் இ.போ.ச. பேருந்தில் வரக் கூடியதாக இருப்பதாகவும் மாலையில் வீடு செல்லும் போது பேருந்தில் இடமில்லை என்பதால் ஏற்றாமல் செல்வதாகவும் குறிப்பிட்டார். இதன் போது மாவட்டச் செயலர், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்திலிருந்து அரச ஊழியர்களுக்கான போதுமான பேருந்துச் சேவைகளை நடத்துமாறு இ.போ.சவினரிடம் கேட்டுக் கொண்டார்.
அத்துடன் வழித்தடத்தில் செல்லும் போது பேருந்தில் இடமில்லாத நிலைமையில், பயணிகள் வீதிகளில் காத்திருப்பதை சாரதிகள் அவதானித்தால் உடனடியாக முகாமையாளருக்கு அறிவித்து அந்த வழித்தடத்தில் மேலதிக பேருந்தை போக்குவரத்துக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் மாவட்டச் செயலர் கேட்டுக் கொண்டார். (ஒ,5)

# அரசை நடத்த பணம் இல்லை

### அமைச்சர் பந்துல அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு, மே 10**

**கொரோனா காரணமாக இலங்கைக்கு வருமானம் கிடைக்கும் பிரதான வழிகள் முடங்கியுள்ளன. இதன் காரணமாக அரசை நடத்திச் செல்வதற்கே பணம் இல்லாத நிலைமையே காணப்படுகின்றது. அரச துறைகளை நடத்துவதற்கு சர்வதேசக் கடன்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமே இருக்கின்றது.**

இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வருமான வரி முழுமையாக முடங்கிவிட்டது. மதுபான விற்பனை ஊடாகத் திறைசேரிக்கும் கிடைக்கும் வருமானம் நின்றுவிட்டது. ஏற்றுமதி இறக்குமதிகள் மூலமாகக் கிடைக்கும் வரிகளும் நின்று விட்டன. அரச நிதிப் பற்றாக்குறை காரணமாக அரசு பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது.

ஏற்றுமதியில் அதிக வருமானத்தை ஈட்டித் தந்த ஆடை உற்பத்தித் துறை முழுமையாக வீழ்ச்சி யடைந்துள்ளது. அதேபோல் சுற்றுலாத் துறை மூலமாக இலங்கைக்கு கிடைத்த வருமானமும் நின்று விட்டது. வெளிப்படையாகக் கூறுவதாயின் அரசிடம் பணம் இல்லை. அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கே அரசு மிகப்பெரிய சவாலை எதிர்கொள்கின்றது. சர்வதேச கடன்களைக் கட்டாயம் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள அதேவேளை சர்வதேசக் கடன் இன்னொரு பக்கம் எம்மை நெருக்கியுள்ளது. இந்த ஆண்டுக்கான சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் மற்றும் வட்டியாகச் செலுத்த வேண்டியுள்ளது. அரசாக நாம் அடுத்த கட்ட இறுக்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது-என்றார். (ஒ,5)



## ஒரேநாளில் அதிகூடிய பி.சி.ஆர் பரிசோதனை!

கொழும்பு,மே 10

இலங்கையில் ஒரேநாளில் ஆயிரத்து 821 பி.சி.ஆர் பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட அதிகூடிய பி.சி.ஆர் பரிசோதனை இதுவாகும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அனில் ஜயசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை, நாராஹேன்பிட்டி தாபர மாவத்தை ஆகிய பகுதிகள் விரைவில் விடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (க-44)

## தனிமைப்படுத்தலில் 298 பேர் விடுவிப்பு

கொடிகாமம்,மே 10

கொடிகாமம் கெற்பேலியில் அமைந்துள்ள 522 படையணியின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 298 பேர், அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல நேற்று சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளிலிருந்து அழைத்துவரப்பட்ட 188 ஆண்களும், 110 பெண்களும் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

17 நாள்கள் தனிமைப்படுத்தலில் இவர்கள் இருந்த நிலையில், கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு, சான்றிதழ்களுடன், சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க-159,20,159)

## நாகர்கோவிலில் மீண்டும் இராணுவத்தினர் அடாவடி

வடமராட்சி, மே 10

நாகர்கோவில் பகுதியில், மூன்று டிப்பர்களில் சென்ற இராணுவத்தினர் வீடொன்றுக்குள் புகுந்து அடாவடியில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் தாக்குதலுக்குள்ளான பெண் ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது.

கடந்த தைப்பொங்கல் தினத்தன்று வீதியால் சென்ற இராணுவத்தினருடன் முரண்பட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டு தாக்கியதாக இராணுவத்தினரால் ஐங்கரன் என்பவர் தேடப்பட்டுவந்தார்.

அவரைத் தேடி பல சுற்றிவளைப்புக்கள் இடம்பெற்றன. அவர் இல்லாததால் பலர் சந்தேகத்தில் கைது செய்து நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் நீதிமன்றில் ஐங்கரனைக் கைது செய்யவேண்டுமென பொலிஸார் விண்ணப்பம் செய்யவில்லை. இந்த நிலையில் 5 மாதங்களாக அவருடைய வீடு தேடிச் செல்லும் இராணுவத்தினர், அவரது வீட்டை அடித்து உடைப்பது, மக்களை அச்சுறுத்துவது போன்ற அடாவடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவும் வீட்டுக்குள் புகுந்த இராணுவத்தினர், ஐங்கரனை கேட்டு, வீட்டில் இருந்த பொருட்களைச் சேதப்படுத்தியதுடன் அங்கு பரல் ஒன்றில் இருந்த மண்ணெண்ணையை நிலத்தில் ஊற்றியதுடன், அயல் வீட்டிலிருந்த மோட்டார் சைக்கிள்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

படையினர் தேடிச் சென்ற நபரின் தாயாரும் படையினரின் தாக்குதலுக்கு இலக்கானார். அவர் மந்திகையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதேவேளை குறித்த வீட்டில் இராணுவத்தினர் தமது இரண்டு தொலைபேசி ,இராணுவத் தொப்பி என்பனவற்றைக் கைவிட்டுச் சென்றுள்ளனர். அவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (க-26)

## நிலநடுக்கம்

கொழும்பு, மே 10

இலங்கைக்கு தெற்கே இந்தியப் பெருங்கடலில், நேற்றுக் காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 6.44 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 5.5 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையத்தின் தகவல்கள் கூறுகின்றன. இந்த நிலநடுக்கத்தால், இலங்கைக்கு எவ்வித பாதிப்பும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## 'நக' அழகுபடுத்தல் மாத்திரமே செய்யலாம்

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 10

அழகுக் கலை நிலையங்கள் (பியூட்டி பாலர்) திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டாலும் அங்கு நகங்களை அழகுபடுத்துவதை மாத்திரமே முன்னெடுக்கமுடியும் என்று யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் குமாரவேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அழகுக் கலை நிலையங்கள், சலூன்கள் என்பன நாளை திங்கட்கிழமை உடனடியாகத் திறக்கமுடியாது. அவர்கள் தமது பகுதி சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றே திறக்கமுடியும். நாளைய தினம் விண்ணப்பத்தைப் பெற்று பூர்த்திசெய்து ஒப்படைத்து, அனுமதிப் பத்திரம் கிடைத்த பின்னரே பணிகளை ஆரம்பிக்கமுடியும்.

மேலும், இரு நாள்களுக்குத் தேவையான பொருள்கள் அதாவது வாடிக்கையாளருக்குப் பயன்படுத்தும் பொருள்கள் இருந்தால் மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.

இரண்டு நாள்களில் எத்தனை வாடிக்கையாளர்களுக்கு தலை முடி வெட்ட உள்ளார்களோ அவர்களுக்குப் போர்ப்பதற்கு அந்தளவு துணிகள் இருந்தாலே அனுமதி வழங்கப்படும்.

இது மிகக் கடினமானது என்பதால், வாடிக்கையாளர்களே வீட்டிலிருந்து துணிகளைக் கொண்டு வருவதற்கு ஊக்குவிக்கப்படுகின்றார்கள், என்றார். (ஒ,5)

## ஊரடங்கு அடுத்த மாதமே முழுமையாக தளர்த்தப்படும்?

கொழும்பு, மே 10

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு அடுத்த மாதமே முழுமையாகத் தளர்த்தப்படும் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாளை திங்கட்கிழமை முதல் கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்படவுள்ளதுடன், சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மக்கள் தங்கள் அன்றாட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மே 11 க்குப் பின்னர் ஏற்பட்ட முன்னேற்றத்தைப் பொறுத்து ஜூன் மாத தொடக்கத்தில் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மொத்தமாக நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது என அமைச்சர் ஒருவரை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மார்ச் 11 அன்று கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முதல் இலங்கையர் அடையாளம் காணப்பட்டார். அதனை அடுத்து கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்த பின்னர் மார்ச் மாதத்தில் அரசாங்கம் ஊரடங்கு உத்தரவை விதித்தது. கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான நாடுகள் தமது வணிகச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கை அரசாங்கமும் மீண்டும் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது என்றும் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# அலுவலகப் பணியாளர்களுக்கான அறிவுறுத்தல்கள்

யாழ்ப்பாணம், மே 10

ஊரடங்கு தளர்வு காரணமாக அலுவலகங்கள் நாளை முதல் வழமைபோன்று இயங்கவுள்ள நிலையில், பணியாளர்கள் எவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1. பணியாளர்கள், பொதுமக்கள் தம்மை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பதற்குரிய வழிகாட்டுதல்களை அலுவலக வாயிலில் காட்சிப்படுத்துதல் வேண்டும்.
2. வேலைத்தளத்தினுள் நுழைவதற்கு முன் பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் கைகளைச் சரியான முறையில் சவர்க்காரமிட்டுக் கழுவ அல்லது தொற்று நீக்கியைப் பாவித்து தூய்மைப்படுத்தவதைக் கட்டாயமாக்கவும்.
3. இதற்காக அலுவலகத்தின் நுழைவாயிலிலும், பொருத்தமான ஏனைய இடங்களிலும் கை கழுவும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் அல்லது தொற்று நீக்கிப் பாவனையை உறுதிசெய்தல் வேண்டும்.
4. அலுவலகத்தின் அனைத்துப் பகுதிகளையும் தூய்மையாக பேணுவதுடன்; அலுவலகத்தில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூடும் பொதுப் பயன்பாட்டிடங்கள் மற்றும் தளபாடங்கள், கதவுக் கைபிடிகள், படிக் கைபிடிகள், இலத்திரனியல் உபகரணங்களை பொருத்தமான தொற்று நீக்கியைப் பாவித்து கிரமமாக அடிக்கடி தூய்மைப்படுத்தலும் வேண்டும்.
5. கூடுமானவரை அலுவலகத்தின் கதவுகள், ஜன்னல்களை திறந்து வைத்திருக்கவும்.
6. குளிரூட்டிகள் மற்றும் வளிச் சீராக்கிகள் வேலைத்தளங்களில் உள்ளகங்களில் பாவிப்பது தடைசெய்யப்பட வேண்டும்.
7. சேவை வழங்கும் இடங்களில் சேவை பெறுநர்களின் எண்ணிக்கையை அலுவலகத்தின் உள்ளேயும், வெளியிலும் மட்டுப்படுத்துவதுடன் அலுவலகப் பணியாளர்கள், சேவை பெறுனர்களுக்கிடையில் ஆகக் குறைந்தது 3 அடி இடைவெளி கட்டாயமாக்கப்பட வேண்டும்.
8. கடமை நேரத்தில் உத்தியோகத்தர்கள் சரியான முறையில் முகக் கவசம் அணிந்து கடமையாற்றுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.
9. பணியிடங்களில் ஒன்றுகூடல்களின்போது முக்கியமான அங்கத்தவர்கள் மாத்திரம் பங்குபற்றுவதையும் போதிய தனிநபர் இடைவெளியையும் உறுதிப்படுத்தல் வேண்டும். ஒன்றுகூடலின் பின் குறித்த பகுதி உடனடியாக தூய்மைப் படுத்தப்படவேண்டும்.
10. ஒவ்வொரு சேவைகளையும் குறித்தொதுக்கப்பட்ட தினங்களிலும், நேரங்களிலும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதுடன் பொருத்தமான ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தி மக்கள் அதிகளவில் ஒன்று கூடுவதைத் தவிர்த்தல் வேண்டும். (ஓ,5)

# ஊரடங்குத் தளர்வால் ஏற்படும் விளைவுக்கு மக்களே பொறுப்பு

## இப்படிச் சொல்கிறது சுகாதாரத் திணைக்களம்



**கொழும்பு, மே 10**

**கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டே நாட்டில் ஊரடங்கு தளர்த்தப்படுகின்றது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சி மட்டுமே. இந்தச் சூழலை தவறாகப் பயன்படுத்தினால் மக்கள் மீண்டும் கொரோனா யுகத்துக்குள் தள்ளப்படுவர் என்று எச்சரித்துள்ளார் சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜசிங்க.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் வாழ்க்கை முறைமையை வழமைக்கு திருப்ப வேண்டும் என்ற வேண்டுகோள் அரசால் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் வழமைபோன்று முழுமையாக மக்களை நடமாட இடமளிக்கமுடியாது. அதிகளவில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அத்தியாவசிய தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் முதல் கட்டமாக நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

மிகவும் அச்சுறுத்தல் என்று கருதிய மேல்மாகாணம் தவிர்ந்து ஏனைய மாகாணங்கள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு தளர்த்தப்பட்ட நேரங்களில் இதுவரை மக்கள் எவ்வாறு கடந்த இரு வாரங்களாக செயற்பட்டனரோ அதேபோன்று தொடர்ந்தும் செயற்பட வேண்டும்.

அதேபோல் மேல்மாகாணத்தில் அதிக நிறுவனங்கள் இயங்க வேண்டிய கட்டாயம் இருப்பதால் கட்டுப்பாடுகள் அதிகம் விதிக் கப்பட்டு விடுவிக்கப்படுகின்றது. ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் காலையில் பேச்சு நடத்தியதுடன் வர்த்தமானி அறிவித்தல் விடுக்கும் போது உள்வாங்கப்பட வேண்டிய விடயங்களை அறிவுறுத்தியுள்ளோம். உடனடியாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதில் முற்றுமுழுதாக வியாபார, வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க மட்டுமே இடமளிக்கப்பட வேண்டும். மக்களை அநாவசியமாக நடமாட இடமளிக்க முடியாது. ஆனால் இந்தக் கட்டுப்பாடுகள் வெகு விரைவில் முழுமையாக கைவிடப்படும்.

ஆனால் நீண்டகாலத்துக்கு நாம் சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

தூய்மை, சமூக இடைவெளி என அனைத்தையும் நாம் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும். நாட்டை விடுவிக்கும் நிலையில் மீண்டும் கொரோனா பரவும் வாய்ப்பு உள்ளது.

இது நகர்ப்புறங்களில் அதிகம் தாக்கும். மக்கள் இதனை நன்கு உணர்ந்து கொண்டு நாளாந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கொழும்பு நகர்ப்புறங்கள் பாதிக்கப்படும் அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே கொழும்பு வாழ் மக்கள் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும். ஒரு சிலர் விடும் தவறுகள் காரணமாக மீண்டும் நாடே முடக்கப்படும் வாய்ப்புகளும் ஏற்படலாம் என்ற அச்சுறுத்தலைவிடுத்துக்கொண்டே நாட்டில் ஊரடங்கை தளர்த்தவும் நடவடிக்கை எடுக்கின்றோம்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டு நாள்கள் கடக்கும் சந்தர்ப்பங்களில் மீண்டும் வைரஸ் தாக்கம் குறித்த அச்சுறுத்தல் அதிகரிக்கும்.

எமக்கு மட்டும் அல்ல உலகில் அனைத்து நாடுகளுக்கும் இந்த நெருக்கடி ஏற்படுகின்றது. எனவே வயதானவர்கள், நோயாளர்கள் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டும். சமூகப் பரவலில் மீண்டும் தாக்கப்பட்டால் வயதானவர்கள் இறக்க நேரிடலாம். இத்தாலி, அமெரிக்கா மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் உயிரிழப்பு வீதம் அதிகரிக்க இதுவே காரணமாகும். எனவே எமது சுகாதார அதிகாரிகள் சமூகப் பரவலைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கின்றனர். நெருக்கடியிலும் எமது வாழ்க்கையை கொண்டு நடத்தவே இந்த சவாலை முன்னெடுக்கின்றோம்- என்றார். (ஓ,5)



# கொரோனாவைத் தடுப்பது மக்களின் கைகளிலேயே!

## அரச மருத்துவ அதிகாரிகள் கருத்து

கொழும்பு, மே 10

நாளை முதல் ஊரடங்கைத் தளர்த்துவதற்கு அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கையில் கொரோனாவால் ஏற்படும் ஆபத்து இன்னும் குறையவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் பொறுப்பற்றுச் செயற்படுவார்களாயின் மேலும் ஆபத்தான நிலைமையை நோக்கியே செல்ல வேண்டும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினரும், சிறுவர் மருத்துவமனையின் செயலருமான மருத்துவ நிபுணர் வாசன் இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதாரம் வீழ்ச்சிய டைந்துள்ள நிலையில் ஊடரங்குத் தளர்வு தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் மக்களுக்கு உணவுப் பற்றாக் குறை, வாழ்வாதாரப் பிரச்சினை என்பன ஏற்படலாம். வைரஸ் தொற்று ஏற்பட்ட ஒருவர் அதிலிருந்து முழுமையாகக் குணமடைந்தால் அவர் உயிர்ப்பான நோயாளர் அல்ல. இலங்கையில் உயிர்ப்பான நோயாளர்கள் அதிகமாகக் காணப்படுகின்றமையே ஆபத்தானதாகும். திங்கட்கிழமை முதல் தனியார் துறைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அநாவசியமாக வெளியிடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வைரஸால் ஏற்படும் ஆபத்து இன்னும் குறையவில்லை. ஆனால் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இந்நிலைமை எதிர்காலத்தில் தொடர்வதும் வைரஸ் தாக்கத்தைக் குறைத்துக் கொள்வதும் மக்கள் கைகளிலேயே உள்ளது- என்றார். (ஓ,5)

# தனிமைப்படுத்தலை மீறினால் 2 ஆண்டுகள் கடூழியச் சிறை!

## வழிகாட்டல்கள் அடங்கிய விசேட வர்த்தமானி இன்று வெளியாகும்

கொழும்பு, மே 10

தனிமைப்படுத்தல் சட்டத்தின் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதன்படி இந்தச் சட்டத்தை மீறும் நபருக்கு 2 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படக்கூடும் என பொலிஸ் சட்டப்பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டம் உட்பட ஊரடங்கு தளர்வின் போது நடந்துகொள்ளவேண்டிய விதம் பற்றி விபரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் சுகாதார அமைச்சால் இன்று ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

கொரோனா வைரஸ் வேகமாக பரவக்கூடிய அபாய வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் நாளை திங்கட்கிழமை அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் செயற்படவுள்ளன. அதற்கான வழிகாட்டல்களும் வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

எவ்வித பாதிப்பும் இன்றி நாட்டை கட்டம், கட்டமாக இயல்பு நிலைக்கு கொண்டுவரும் நோக்கிலேயே புதிய நடைமுறை அறிமுகப்படுத்தப்படுகின்றது என்று சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஓ,5,44)

## வெளிநாடுகளில் சிக்கியுள்ளோரில்

# பாதிப்பட்டுள்ளவர்களை முன்னுரிமை அடிப்படையில் அழைத்து வரத் திட்டம்



கொழும்பு, மே 10

**புலம்பெயர் தொழிலாளர்களில் மிகவும் பாதிக்கப்பட்டிருப்போரை நாட்டுக்கு மீள அழைத்து வருவதில் முன்னுரிமைய ளிப்பதற்கான நடவடிக்கை குறித்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஆரியசிங்க விளக்கமளித்துள்ளார்.**

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விளக்கத்தை வழங்கியுள்ளார். இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளதாவது;

புலம்பெயர் தொழிலாளர்களை நாட்டுக்கு மீள அழைத்து வருவதற்கு கவனம் செலுத்தப்படுகிறது. மாலைதீவின் மாலி தீவில் சுமார் 1200 முதல் 1500 பேர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

குவைத் போன்ற இடங்களில், மத்திய கிழக்கின் ஏனைய பகுதிகளிலான பொதுவான கொவிட்19 பாதிப்புக்கும் மேலதிகமாக, குவைத் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட பொது மன்னிப்பும் உள்ளது. குவைத் அரசாங்கம் அவர்களை மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு முன்வந்துள்ளது. குறித்த பொது மன்னிப்புச் சலுகையை இலங்கை பயன்படுத்திக் கொள்ளும் ஒரு செயன்முறை குறித்து கலந்துரையாடி, குவைத் பிரதிநிதிகளுடன் வெளிவிவகார அமைச்சர் பேச்சு மேற்கொள்ள உள்ளார். இந்தச் செயன்முறை முன்னெடுக்கப்படும் என்ற போதிலும், தற்போதைய நிலையில், நாட்டுக்கு வர விரும்பும் அனைவரையும் அழைத்து வர முடியாது என்பது தொடர்பில் குவைத் அரசாங்கம் மிகுந்த விழிப்புடன் உள்ளது. எனவே, நாங்கள் அவர்களை எவ்வாறு வெளியேற்றுவது என்பது குறித்து சில பேச்சுவார்த்தைகளை இரு அரசாங்கங்களுக்கிடையில் நடத்த வேண்டும். பங்களாதேஷ் போன்ற இடங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணிபுரியும் வெளிநாட்டிலுள்ள இலங்கையரின் பிரச்சினையும் உள்ளது. அவர்களில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளாவர். மத்திய கிழக்கிலிருந்தும், ஏனைய இடங்களிலிருந்தும் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மீள அழைத்து வருவதில் இதேபோல் கவனம் செலுத்தப்படும். இதேவேளை, குறுகிய கால விஜயங்களை மேற்கொண்டு, வெளிநாடுகளில் சுமார் 3 ஆயிரம் பேர் சிக்கியுள்ளனர், அவர்களுக்கு தெரிவுகள் எதுவும் இல்லை என்றபோதும், அவர்களும் நாட்டிற்கு மீளத் திரும்ப வேண்டும், எனவே, அநேகமாக தனிமைப்படுத்தலுக்காக விடுதிகளைப் பயன்படுத்தும் வகையில், சாத்தியமான அளவிற்கு தற்போதைய செயற்பாடுகளுக்குள் அவர்களையும் உள்வாங்க முயற்சிக்கப்படுகிறது - என்றார். (ப)



## நாட்டில் அடுத்த வாரம்

# முகக் கவசங்கள், கையுறை பாவனை அதிகரிக்கும்

கொழும்பு, மே 10

அரச மற்றும் தனியார் துறைகளின் பணிகளை மீள ஆரம்பிப்பதுடன், அடுத்த வாரத்தில், சுற்றுச் சூழலில் வெளியேற்றப்படும் முகக் கவசங்கள் மற்றும் கையுறைகளின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக, பொதுமக்கள் சத்திர சிகிச்சை முகக்கவசம் உள்ளிட்ட பல்வேறு வகையான முகக் கவசங்களைப் பயன்படுத்தி வருகின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறிருப்பினும், தற்போது வரை பயன்படுத்தப்படும் முகக் கவசங்களின் எண்ணிக்கை எவ்வளவு? என்பது தொடர்பான தகவல் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சு என்பனவற்றிடம் இல்லை என்று அறிய முடிகின்றது. பயன்படுத்தப்பட்ட முகக் கவசங்கள் மற்றும் கையுறைகள் ஏனைய கழிவுகளைப் போன்று முகாமைத்துவம் செய்யவோ அல்லது மீள்சுழற்சிக்கு உட்படுத்தவோ முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## சுகாதார முறைப்படி

# திங்கட்கிழமை முதல் சலூன்கள் திறக்கும்

கொழும்பு, மே 10

ஊரடங்கு உத்தரவு தளர்தப்படும் பகுதிகளில் உள்ள அழகு நிலையங்கள் மற்றும் சிகை அலங்கார நிலையங்களை எதிர்வரும் 11ஆம் திகதி தொடக்கம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அவை சுகாதார அமைச்சால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, முடி வெட்டுவது தவிர்ந்த ஏனைய முகங்களில் மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அழகு நிலையங்களைத் திறப்பதற்கு முன் பிரதேசத்தில் உள்ள சுகாதார சேவைகள் அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டியது அவசியம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான முழுமையான தகவல்களை பெற்றுக்கொள்ள www.health.gov.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ப)

# மக்களுக்கான வழிகாட்டல் மும்மொழிகளில் வெளியீடு

கொழும்பு,மே 10

ஊரடங்கு தளர்த்தப்பட்ட பின்னர் பொதுமக்கள், எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பில் சுகாதார அமைச்சினால் மும்மொழிகளுடன் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது,

வைரஸ் தொற்று காலத்துக்கு முன்பு போல் அல்லாமல், அதன் பின்னர் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை நாம் சிந்தித்து செயல்படுவது அவசியம். முக்கியமாக அரச,அரச சார்பற்ற மற்றும் ஏனைய நிறுவனங்கள் கைத்தொழில் துறை நிறுவனங்கள் உட்பட அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் இணையதளத்திலும், பிரதமர் அலுவலக இணையத்தளத்திலும் அவற்றைப் பார்வையிட முடியும். இந்தத் தகவலை அறியவில்லை எனக் கூறி தட்டிக்கழிக்க முடியாது. இந்த விடயங்களில் தெளிவில்லை என்றால், அதிகாரிகள் குழு அதனைத் தெளிவுபடுத்த தயாராக உள்ளனர்- என்றார். (க)

# இன ரீதியான பாரபட்சத்துக்கு மனோ கணேசனும் கண்டனம்

கொழும்பு, மே 10

கொரோனாவினால் மரணிக்காத முஸ்லிம் பெண்ணின் உடல் முறை தவறித் தகனம் செய்யப்பட்டமைக்குக் கவலை வெளியிட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் மனோகணேசன், நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெறும் இன ரீதியான பாரபட்சத்தைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

இது குறித்து மனோ கணேசன் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது;

கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றால் மரணிக்காத, கொழும்பு முகத்துவாரத்தைச் சேர்ந்த ஒரு இஸ்லாமிய இலங்கைத் தாயின் உடல் முறைதவறித் தகனம் செய்யப்பட்டமைக்காக ஒரு இலங்கையன் என்ற வகையில் வேதனையடைகிறேன். முஸ்லிம் சமூகத்தின் மீதான இந்த இன ரீதியான பாரபட்சத்தைக் கண்டித்து, இந்த நடவடிக்கைக்கு எதிராக எனது நிலைப்பாட்டைப் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றேன் என்றுள்ளது. (ப)

# தொழிற்சாலை செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

*கரு ஜயசூரிய வலியுறுத்து*

கொழும்பு, மே 10

தற்போதைய நெருக்கடி நிலையில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் எழுச்சியடைய வேண்டுமாயின், வணிகங்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்காக இதுவரை காலமும் நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில் வணிகச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கரு ஜயசூரிய அவரது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது:

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்துவதற்காக சுமார் 50 நாள்களுக்கு மேலாக நாடு முடக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குக் காத்திக்கொண்டிருக்கிறார்கள். எந்தவொரு வருமானமுமின்றி வீடுகளுக்குள் அடைபட்டிருப்பது உடலியல் மற்றும் உளவியல் ரீதியாக மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும். தற்போதைய நெருக்கடி நிலையின் மத்தியில் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் எழுச்சியடைய வேண்டுமாயின் வணிகங்கள் மற்றும் கைத்தொழிற்சாலைகள் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என்றுள்ளது. (ப)

# 5,728 பேர் வெளியே 4,931 பேர் உள்ளே

கொழும்பு, மே 10
முப்படைகளால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருந்து இதுவரை 5 ஆயிரத்து 728 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர் என்று கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட நடவடிக்கை மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
முப்படைகளால் நிர்வகிக்கப்படும் 39 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 4 ஆயிரத்து 931 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
இதுவரை 390 கடற்படையினர் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகியுள்ளதுடன், அவர்கள் அனைவரும் முகாம்களுக்குள் இருந்தபோதே தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர்.
வெலிசறை கடற்படை முகாமில் இதுவரை 308 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனைய 82 தொற்றாளர்கள் வேறு பகுதிகளில் உள்ள முகாம்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### இயல்புநிலை திரும்புகிறது என்றாலும்

# அவசியமெனில் மட்டுமே வெளியே வரவேண்டும்!

### *மாவட்டச் செயலர் மகேசன் கோரிக்கை*



**யாழ்ப்பாணம், மே 10**
**யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டு மாதங்களின் பின்னர் இயல்புநிலை திரும்புகின்றது என்றாலும், பொதுமக்கள் அத்தியாவசிய சேவைக்கு மாத்திரமே வீடுகளிலிருந்து வெளியே வரவேண்டும். ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் கொரோனா ஆபத்து இன்னமும் நீங்கவில்லை என்பதை மக்கள் மனதிலிருத்த வேண்டும்.**

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் சேவைகளை வழமைக்குக் கொண்டு வருதல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.
இதன் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா அபாயம் இன்னமும் நீங்கவில்லை.
நாம் இன்னமும் அவதானமாக இருக்கவேண்டிய காலகட்டத்தினுள் செல்கின்றோம். வேறு இடங்களிலிருந்து ஆள்கள் வரக்கூடும்.
அது தொடர்பில் சுகாதாரத் தரப்பினருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.
இயல்புநிலைக்குத் திரும்புவதாக இருந்தாலும் மக்கள் அத்தியாவசிய தேவைக்கு மாத்திரமே வீட்டுக்கு வெளியே வரவேண்டும்.
சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலுக்கு அமைய பொதுப் போக்குவரத்து, வர்த்தகர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள், உணவக உரிமையாளர்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றி பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் தமது அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்- என்றார். (ஒ,5)

# வீடு உடைத்துத் திருட்டிய இருவர் பொலிஸால் கைது



கொடிகாமம், மே 10
மன்னார் கேரதீவு வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுக்குப் பூட்டிய கதவு மற்றும் மின் மோட்டர் என்பவற்றைத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.
திருடிச் சென்ற இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுக் கதவுகளும், மின் மோட்டரும் கைதடி விநாயகர் திருமண மண்டபத்துக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.
நாவற்குழி மன்னார் கேரதீவு வீதியில் ஐயனார் கோவிலடியில் புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுக்குள் ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் வீட்டுக்கு பூட்டிய இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான கதவுகளை கழற்றி எடுத்ததுடன், அங்கிருந்த மோட்டரையும் திருடிச் சென்றுள்ளனர்.
இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் கைதடி பகுதியைச் சேர்ந்த இருவரைக் கைது செய்தனர். திருடப்பட்ட பொருள்களையும் கைப்பற்றினர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (எ-159)

# கடை உடைத்து பணம் திருட்டு

யாழ்ப்பாணம், மே 10
யாழ்ப்பாணம் பரமேஸ்வராச் சந்தியில் உள்ள ஓர் சைவ உணவகத்தை உடைத்து உட்புகுந்த திருடர்கள் உணவகத்தில் கிருஸ்ணர் சிலைக்கு காணிக்கையாக வைத்திருந்த பணத்தை அபகரித்துச் சென்றுள்ளனர்.
பலாலி வீதியில் பல்கலைக் கழகத்திற்கு செல்லும் வீதியிலேயே நேற்று பகல் இந்தத் திருட்டுச் சம்பவம் நடந்துள்ளது. தினமும் இரவில் பணியாளர்கள் கடையில் படுத்துறங்குவது வழமையாகும். நேற்று முன்தினம் மாலை கடைக்குச் சென்றபோது உணவகத்தின் பின் கதவுகள் உடைக்கப்பட்டிருந்தன.
உடைக்கப்பட்ட உணவகத்தின் காசு மேசையில் இருந்த கிருஸ்ணர் சிலையுடனான கண்ணாடிப் பெட்டியில் 3 ஆண்டுகளாகப் போடப்பட்டு சேகரிக்கப்பட்ட பணம் திருடப்பட்டிருந்தது. காசு மேசைக்குள் இருந்த 2 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டிருந்தது. சுமார் 20 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் களவாடப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (எ-105)

# இறுதிச் சடங்கு செய்ய அனுமதிக்க வேண்டும்

### *சஜித் தெரிவிப்பு*

கொழும்பு, மே 10
அன்பிற்குரியவர்களை இழப்பது எவருக்கும் மிகப்பெரிய சோகமாகும். அத்தகைய துயரம் நிறைந்த சமயத்தில் எவ்வித பாரபட்சமுமின்றி அவர்களது இறுதிச் சடங்குகளை மேற்கொள்ள அனுமதிப்பது அனைவரதும் பொறுப்பாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்.
ஒரு மனிதாபிமான சமுதாயத்திற்கு இன்றியமையாத இத்தகைய தார்மீக நெறிமுறைகளையும் விழுமியங்களையும் நிலைநிறுத்த எம்மால் முடியாது போனால் இனவெறி ஆழமாக வேரூன்றி, இன மத பாகுபாடு, ஓரங்கட்டல் என்பவற்றின் காரணமாக நாம் தோல்வியடைந்த தேசமாகிவிடுவோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# முஸ்லிம்களுக்கு ஆதரவாக பிமல் ரத்நாயக்க 'டுவிட்'

கொழும்பு, மே 10
இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட பாரபட்சம் காட்டப்படுவதை சுட்டிக்காட்டி ஜேவிபியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க டுவிட்டரில் பதிவு ஒன்றை இட்டுள்ளார்.
கொரோனா வைரஸால் உயிரிழந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவரின் இறுதிக்கிரியைகளின் படத்தையும், முஸ்லிம் பெண் ஒருவரின் உடலிற்கு இறுதி மரியாதை செய்யப்படும் படத்தையும் வெளியிட்டு இரு தாய்மார்களின் பிரியாவிடை என பிமல் ரத்நாயக்க இந்தப் பதிவைச் செய்துள்ளார்.
'ஜனாதிபதி அவர்களே இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு பாதுகாப்பான கௌரவமான வாழ்க்கையை உங்களால் உறுதிப்படுத்த முடியாவிட்டாலும், தயவு செய்து அவர்களுக்கும் கௌரவமான இறுதிச் சடங்கினை உறுதி செய்யுங்கள்' என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஊரடங்குச் சட்டம் ஒருபுறம் மணற்கொள்ளை மறுபுறம்

கிளிநொச்சி, மே 10
நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மணல் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. அந்தப் பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களின் மேல் பகுதியை அத்துமீறி அகழ்ந்தே மணல்கொள்ளை இடம்பெறுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
விவசாய நிலங்கள் 6 அடி ஆழம் வரை தோண்டப்பட்டு, அந்த மணல் வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. பல காலமாக இவ்வாறான செயற்பாடுகள் நடைபெற்று வந்த நிலையில், ஊரடங்கு வேளையும் அது தொடர்கிறது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது. மீண்டும் அந்த இடத்தில் விவசாயம் செய்வதானால், பல லட்சம் ரூபா செலவு செய்து, காணிகளுக்குள் மண் பறிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். எனவே இந்த விடயம் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து, விவசாய நிலங்களில் மணல் அகழும் இந்தச் செயற்பாடுகளை தடுப்பதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-113)



# கிளிநொச்சியில் தொற்று நீக்கம்

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி இராணுவ தலைமையகத்தின் ஏற்பாட்டில் கொரோனோ தொற்று நீக்கும் செயற்பாடு நேற்று முற்பகல் நடைபெற்றது.

பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளான டிப்பர் சந்தி முதல் கரடிப்போக்கு சந்தி வரையான ஏ - 9 வீதியில் குறித்த தொற்று நீக்கும் செயற்றிட்டம் படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெயந்த குணரட்ணவின் ஆலோசனைக்கமைவாக கிளிநொச்சி 57ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் டி சில்வாவின் வழி நடத்தலில் காலாற்படையினரால் தொற்றுநீக்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளான வங்கிகள், பேருந்து நிலையம், பேருந்து தரிப்பிடங்கள், வர்த்தக நிலையங்கள், நடைபாதைகள் ஆகிய பகுதிகளில் இவ்வாறு தொற்றுநீக்கம் செய்யப்பட்டது.

கிளிநொச்சி பொதுச் சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்பில் நடைபெற்ற இந்தச் செயற்பாட்டில் சுகாதார அதிகாரிகளும் பொலிஸாரும்கலந்துகொண்டிருந்தனர். (கு-6,214,222)

# மணல் கடத்தலைத் தடுப்பதற்கு வீதிகளில் காத்திருக்கும் மக்கள்!

யாழ்ப்பாணம், மே 10

**ஊரடங்கு வேளையிலும் கிளிநொச்சியிலிருந்து நூற்றுக் கணக்கான டிப்பர்களில் மணல் கடத்தப்படுகின்றன. அதனால் மணல் அகழப்படும் பகுதிகளும் உள்பகுதி வீதிகளும்கூட நாசமாகிவிடுகின்றன. அவற்றைத் தடுக்கும் நோக்கில் மணல் அகழ்வதைத் தடுக்க திருவையாறு, கனகாம்பிகைக்குளம் பகுதி மக்கள் வீதிகளில் தடைபோட்டு காவல் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

இரணைமடுக் குளத்தின் குளக்கட்டைப் பாதுகாக்கும் வகையில் ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் எந்தவோர் அனுமதியுமின்றி தினமும் நூற்றுக்கணக்கான டிப்பர் வாகனங்களில் மணல் கடத்தப்படுகின்றது. கடத்தல் தொடர்பில் பல தடவைகள் மாவட்டத்தின் சகல அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியும் எந்தப் பயனும் கிட்டவில்லை. பொலிஸாரிடம் முறையிட்டாலும் யார் முறையிடு கின்றனர் என்ற விவரம் மணற்கொள்ளையர்களிடம் சென்றுவிடுகின்றது. அதனால் இரவில் நிம்மதியாகப் படுத்துறங்கவும் முடியவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஊரடங்குவேளையிலும் அதிகளவான மணல் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குக் கடத்தப்படுகின்றது. இதற்கு அனுமதி வழங்கியது யார்? நேற்று அந்தப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது சுமார் 80



அடிக்கும் மேலாக மணல் அகழப்பட்டிருந்தமையைக் கண்டு அதிர்ந்தோம். அதிகாரிகள் உறங்குகின்றனர். இதனால் எதிர்காலத்தில் இரணைமடுக் குளத்துக்கும் ஆபத்து ஏற்படக்கூடும். தங்களால் எதுவுமே செய்ய முடியாத நிலை உள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் நூற்றுக்கணக்கான டிப்பர் வண்டிகள் மணல் ஏற்றிச் செல்கின்றன. எமது வீதிகளும் அழிவடைகின்றன. தற்போது உள்வீதிகளையேனும் பாதுகாக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். வீதிகளுக்குக் குறுக்கே கட்டைகள்போட்டு நாமே தடை ஏற்படுத்தி வீதிகளைப் பாதுகாக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்று மக்கள் தெரிவிக்கின்றனர். (கு-105)



# சக்கர நாற்காலி கையளிப்பு

யாழ்ப்பாணம்,மே 10

செட்டிகுளம் பிரமனாலங்குளத்தைச் சேர்ந்த சிறப்புத்தேவையுடைய சுரேஷ்குமாருக்கு சக்கர நாற்காலி அண்மையில் வழங்கப்பட்டது.

சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த சோதிலிங்கம் குடும்பத்தினர் இந்த உதவியை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)

# இன்று மின்தடை

யாழ்ப்பாணம், மே 10

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்தில் இருந்து திருக்கேதீச்சரம் வரை, வங்காலைப் பிரதேசம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று மின்பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# நவீன தொழிநுட்பத்துடன் விவசாயம் செய்ய உதவி!

## 5 மாகாணங்களில் விண்ணப்பிக்கலாம்

வவுனியா, மே. 10

சிறுகைத்தொழில் அமைச்சினூடாக வடக்கு உட்பட 5 மாகாணங்களில் நவீன தொழில்நுட்பத்துடன் விவசாயம் சார்ந்த செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கான திட்ட முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன.

சேதனப் பசளை உற்பத்தி, பழங்கள் மற்றும் மரக்கறிகளைப் பதப்படுத்தல், அறுவடையின் பின்னரான தொழில்நுட்பம், கால்நடை மற்றும் பால் உற்பத்திகளுக்கான பெறுமதி சேர் உற்பத்தி, புதிய தொழில்நுட்பங்கள் ஊடான பெரியளவான பயிர்ச்செய்கை, பழச்சாறு உற்பத்திகள் மற்றும் விவசாய உற்பத்திகளிலிருந்து நேரடியாகப் பொதிசெய்யப்படும் உணவு தயாரிப்பு (ஏற்றுமதி தரமுடைய மரவள்ளி சீவல்), விவசாயத்துக்கான மாற்று சக்தி வழங்கல் சூரிய மின்உற்பத்தி, தென்னைசார் பெறுமதி சேர் உற்பத்தி போன்றனவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஒரு திட்டமதிப்பீடு ஒரு கோடி ரூபாவாக இருப்பின் குறிப்பிட்ட அமைச்சிடம் இருந்து பகுதி பகுதியாக 50 இலட்சம் ரூபா நன்கொடையாக வழங்கப்படும். 40 இலட்சம் ரூபா வங்கிகளில் குறைந்த வட்டி விகிதத்தில் கடன் பெறுவதற்கான வசதிகள் செய்துதரப்படும். 10 இலட்சம் ரூபா சொந்த முதலீடாக அமையும்.

இவ்வாறு 3 கோடி ரூபா வரையான திட்டங்களைச் சமர்ப்பிக்க முடியும். இதேவளை 30 -375 மில்லியன் வரையான திட்டங்களுக்கு 100 மில்லியன் வரை அமைச்சு நிதி வழங்கும்.

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் குறித்த திட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்றிட்டத்துக்கான வடக்கு மாகாண பிராந்திய அலுவலகம் இல. 330, கூசைப்பிள்ளையார்குளம் வீதி, வவுனியா என்ற முகவரியில் அமைந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு 0767330918-பிரியா, 0773539666 -ரோகன ஹமகே என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-110)



# கிளி. மருத்துவமனைக்கு கொரோனா உடைகள்

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சிமாவட்ட மருத்துவமனைக்கு ஒரு தொகுதி கொரோனா பாதுகாப்பு உடைகள் மற்றும் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகர ரோட்டறிக் கழகத்தின் கோரிக்கைக்கு அமைவாக, இலங்கை மாலைதீவு ரோட்டறி மாவட்ட (3220) ஆளுநர் மற்றும் ரோட்டறி சமூகத்தால் கிளிநொச்சி ரோட்டறிக் கழகத்துக்கு வழங்கப்பட்ட பொருள்களே இவ்வாறு வழங்கப்பட்டன. (கு-214)

# தீயில் கருகின ஏழு வீடுகள்

கொழும்பு, மே. 10

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா மணிக்கவத்தை 3ஆம் பிரிவு தோட்டத்தில் 20 வீடுகளைக்கொண்ட நெடுங்குடியிருப்பில் நேற்றுப் பரவிய தீ காரணமாக 7 வீடுகள் முற்றாக எரிந்து தீக்கி ரையாகின என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். 89க்கும் மேற்பட்டவர்கள் நிர்க்கதி யாகியுள்ளனர். தீயில் வீட்டிலிருந்த சகல பொருள்களும் எரிந்துநாசமாகிவிட்டன என்று- தெரிவிக்கப்பட்டது. (கு)

# கொரோனாவுடன் வாழப் பழகுவோம்

வைத்திய கலாநிதி. கோ.றஜீவ்
(பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.)

கொரோனா தொற்று நோய் கடந்த ஆண்டின் நடுப்பகுதியில் சீனாவில் ஆரம்பித்து இன்று உலகளாவிய தொற்று நோயாக பல நாடுகளிடையே பரவியுள்ளது. உலகளாவிய ரீதியில் பல தேசங்களில் பெருமளவான உயிரிழப்புக்களையும் பொருளாதார பாதிப்புக்களையும் கொரோனா ஏற்படுத்தியுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை உயிரிழப்புக்கள், நோயாளர் எண்ணிக்கை குறை வானபோதும் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்களை இந்த வருடம் பூராக நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

பூரணமாக முடக்கப்பட்டிருந்த நாடு படிப்படியாக இயல்புநிலை மைக்குத் திரும்பி வருகிறது. வரும் வாரம் முதல் ஓரளவுக்காவது நாடு பூராவும் இயங்கு நிலைக்கு வரும் என எதிர் பார்க்கப்படுகிறது.

அவ்வாறெனின் கொரோனா அபாய நிலையை இலங்கை தாண்டி விட்டதா? என வினவத் தோன்றும். அதற்கு இல்லை என்பதே இன்று வரைக்குமான பதில் . ஆனால் எவ்வாறு ஆபத்து நீங்காமல் இயல்பு நிலைக்குத் திரும்புவது என்பது பலரது வினா.

எப்போது ஆபத்து நீங்கும் என எவருக்கும் தெரியாது. தொற்றுதலுக் குள்ளான அறிகுறிகள் அற்றவர்கள் எத்தனை பேர்? குணம டைந் தவருக்கு மீள நோய் வருமா? தடுப்பூசி பயனளிக்குமா? போன்ற கேள்விகளுக்கும் விடையை ஆணித்தரமாகக் கூற முடியாது. எனவே இப்போதைக்கு எமக்கு இருக்கும் வழி கொரோனாவுடன் வாழ்தல் தான். மார்ச் மாதத்தில் நாம் இருந்த நிலையில் தற்போது எவ்வளவோ முன்னேற்றம் கண்டுள்ளோம். எனவே அதனை நாம் தக்க வைக்க விரும்பின் எமது நடைமுறை வாழ்க்கையில் தொடர்ச்சியாக பாது காப்பு நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

முதலில் பொதுப்போக்குவரத்துப் பயன்படுத்தும்போது பயன்படுத்த வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகளைப் பார்ப்போம்.

## பொதுப் போக்குவரத்துச் சேவைகளை பாவிக்கும் பொழுது கடைப்பிடிக்க வேண்டியவை



- பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பாவிக்கும் பொழுது அவற் றினுள் ஆசனங்களில் 50 வீதத்தை மட்டும் பாவியுங்கள்.
- எப்பொழுதும் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் தூரத்தைப் பேணுங்கள்.
- இயலுமானவரை நுழைவாயிலில் கைகளைக் கழுவுங்கள்.
- உங்கள் முகக் கவசத்தைச் சரியான முறையில் அணியுங்கள்.
- நீங்கள் எடுத்துச்செல்லும் கைப்பைகள் அல்லது பொதிகள் போன்றவற்றைக் குறைத்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் கையடக்கத் தொலைபேசியை அல்லது பணப்பையை எப் பொழுதும் உங்கள் கைப்பையினுள் அல்லது சட்டைப்பையினுள் வைத்திருங்கள்.
- இயலுமானவரை பணப்பரிமாற்றத்தை குறைத்து, சரியான அளவில் பணத்தை செலுத்துங்கள்.
- முகக் கவசங்களையும் ரிசுக் கடதாசிகளையும் பாவனையின் பின் பாதுகாப்பான முறையில் மூடக்கூடிய ஒரு குப்பைத் தொட்டியினுள் அப்புறப்படுத்துங்கள்.
- பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் பிரயாணம் செய்த பின் கைகளை சவர்க்காரமிட்டு 20 வினாடிகளுக்காவது கழுவுங்கள்.
- உங்கள் வேலை செய்யும் இடத்துக்கு அல்லது அத்தியாவசிய தேவைகளுக்காகச் செல்லும்போது நடந்தே செல்லுங்கள்.
- அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புக்கள் சேவை வழங்குநரால் சுத் தப்படுத்தப்பட வேண்டும்.

## தவிர்க்கப்பட வேண்டியவை



- தடிமன் இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருந்தால் பொதுப்போக்குவரத்து சேவைகளில் பிரயாணம் செய்வதை தவிர்த்துக்கொள்ளுங் கள்.
- அநாவசியமான பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் வாய், மூக்கு மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- இயலுமானவரை அடிக்கடி தொடப்படும் மேற் பரப்புக்களைத் தொடுவதைத் தவிர்த்துக் கொள் ளுங்கள்.

(தொடரும்)





# குப்பிளானில் கிடாரம் பூ

யாழ்ப்பாணம்,மே 10

குப்பிளான் கிராமத்தில் உலகில் மிகவும் துர்நாற்றம் வீசும் மலர் எனக் கூறப்படும் கிடாரம் மலர் மலர்ந் துள்ளது. குப்பிளான் தெற்கில் உள்ள வீடொன்றில் இந்த மலர் மலர்ந்துள்ளது. இந்த மலர் 15 சென்றி மீற்றர் உயரம் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அந்த மலரைப் பலரும் ஆச்சரியத்துடன் பார்வையிட்டு வரு கின்றனர். ஒரு அடி உயரத்தில் வளரும் இந்த மலரில் இருந்து அதிக துர்நாற்றம் வீசுவதாகக் கூறப்படு கின்றது. இந்த மலர் பல நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுத்த முடியும். வீக்கம், பசியின்மை, கல்லீரல் நோய், இருமல், ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி உட்பட நோய்களுக்கு இந்த மலரின் கிழங்கு பயன்படுத்துவ தாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை இந்த கிடாரம் மலர் கடந்த சில வருடங்களின் முன்னர் புத்தளம் பகுதியிலும் பூத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# ‘பார்’களுக்கு தொடர்ந்தும் மூடுவிழா

கொழும்பு, மே 10

நாளை திங்கட்கிழமை முதல் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்த ஊரடங்கை அரசு தளர்த் தினாலும், மதுபான விற்பனை நிலையங்கள் தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப் படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று மேலும் பரவும் அபா யம் இருப்பதால் , மதுபானசாலைகளைத் திறப்ப தனால் அதனைக் கட்டுப்படுத்த முடியால் போய்வி டுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

அதேவேளை மதுபானங்களை ‘ஒன்லைன்’ மூலம் விற்பனை செய்ய சில தரப்புகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன என்று அறியமுடிகிறது. (க)

# கண்ணாடியில் பார்த்துவிட்டு அதிகாரம் பற்றிப் பேசுங்கள்

## கூட்டமைப்புக்கு தவராசா கூறுகின்றார்



**யாழ்ப்பாணம், மே 10**

**மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறாமல் இருக்கக்காரணம் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புமே என்று குற்றஞ்சாட்டியுள்ளார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா. கூட்டமைப்பினர் தங்களின் முகங்களைக் கண்ணாடியில் பார்த்துவிட்டு மாகாணசபை அதிகாரங்கள் தொடர்பில் பேசுவது நல்லது என்றும் அவர் தெரிவித்தார்.**

அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்குங்கள். தொடர்ந்தும் அவற்றை வெறுமையாகவே வைத்திருக்கமுடியாது என்று பிரதமர் மகிந்த ராஜபக் ஷவிடம் அண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சந்தித்தபோது வலியுறுத்தியுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவ்வாறான கோரிக்கைகளை மஹிந்தவிடம் வலியுறுத்த முன்னர் தங்களைக் கண்ணாடியின் முன்பாகநின்று பார்ப்பதுவே வலுவானதாக இருக்கும்.

ஏனெனில், மாகாண சபைகள் எவையும் மக்கள் பிரதிநிதிகளால் ஆட்சி செய்யப்படாமல் ஆளுநர்களின் ஆட்சியிலுள்ளதற்கான முழுப்பொறுப்பையும் கடந்த அரசும் அதற்கு முட்டுக்கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மாகாண சபைத் தேர்தல் திருத்தச்சட்டமூலம் ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி அரசு கொண்டுவந்தது. அதற்கமைவாக புதிய தேர்தல் முறை 50 வீதம் விகிதாசார பிரதிநிதித்துவத்தையும் 50வீதம் தொகுதிவாரியான பிரதிநிதித்து வத்தையும் கொண்டிருக்கும். அந்தத் திருத்தச் சட்டத்துக்கு அமைவாக தொகுதிகளைப் பிரிப்பதற்கான எல்லை நிர்ணயக்குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு தனக்கு விதிக்கப்பட்ட காலவரையறைக்குள் தனது அறிக்கையை 2018 ஆம்ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி உள்ளூராட்சி அமைச்சுக்குச் சமர்ப்பித்திருந்தது. அது 2018ஆம்ஆண்டு ஓகஸ்ட் 24ஆம் திகதி நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லாதமையால் தோல்வியடைந்தது. அந்தத் தேர்தல் திருத்தச்சட்ட விதிகளுக்கு அமைய அவ்வாறு நாடாளுமன்றில் தோல்வியடைந்தால் பிரதமர் தலைமையில் மீளாய்வுக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டும். அதன் அடிப்படையில் அப்போதைய பிரதமர் ரணில் தலைமையில் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்று சபாநாயகரால் அமைக்கப்பட்டது.

தேர்தல் சட்ட திருத்தமூலத்துக்கு அமைய பிரதமர் தலைமையிலான மீளாய்வுக் குழு தனது மீளாய்வு அறிக்கையை இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பித்திருக்கவேண்டும். ஆனால், அப்போதைய பிரதமர் ரணில் மீளாய்வுக் குழுவை நாடாளுமன்றம் கலையும்வரை முறைப்படி கூட்டவும் இல்லை, அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் இல்லை. இதுவே இன்று மாகாண சபைத் தேர்தல் நடைபெறாமல் இருப்பதற்கான காரணம்.

மாகாணசபை அதிகாரம் வேண்டும் என்று முதலைக்கண்ணீர் வடிப்பவர்கள், இருக்கின்ற அதிகாரங்களைப் பாதுகாப்பதற்கு எவ்வித முயற்சி களும் எடுக்காது மௌனிகளாக இருந்து கடந்தகால அரசின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கொடுத் துவிட்டு இப்போது கூக்குரல் போடுவதில் அர்த்தம் இல்லை. என்றார். (கு-20)



# கொரோனா பற்றி விழிப்புணர்வுகள்

வவுனியா, மே 10

வவுனியா நகரசபையினர் கொவிட் 19 தடுப்புமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு பதாதைகளை நகரின் முக்கிய பகுதிகளில் நேற்றுக் காட்சிப்படுத்தியிருந்தனர்.

பாடசாலைகள், பேருந்து நிலையம் உட்பட 30க்கும் மேற்பட்ட பொது இடங்களில் குறித்த பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

கோவிட் 19 வைரஸைக் கட்டுப்படுத்தும் விதமாக தெளிவூட்டல்கள் குறித்த பதாதைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (கு-110)

# இயல்புநிலை ஏற்பட்டாலும் கூட சுகாதாரத்தில் கவனம் தேவை

## பி.எச்.ஐ. சங்கம் அறிவுறுத்து

கொழும்பு, மே 10

நாட்டில் நாளைமறுதினம் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டால் பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு முறைமைகளைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாத பகுதிகளில் வர்த்தக நிலையங்கள், பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்யும் கைத்தொழில் நடவடிக்கைகள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை மீள ஆரம்பிப்பதற்கு கட்டம் கட்டமாக வாய்ப்பளிக்கப்படவுள்ளன.

எனவே, குறித்த சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் சுகாதார பாதுகாப்பு முறைமை களைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும் என்று பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (கு)

# கொழும்பு, கம்பஹாவில் ஊரடங்கு நீடிக்க வாய்ப்பு

நாட்டில் நாளை திங்கட்கிழமை இயல்பு நிலைமையைக் கொண்டுவர அரசு நடவடிக்கைகளை எடுத்துவரும் அதேவேளை, சில மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டத்தை முழுமையாக தளர்த்துவதா இல்லையா என்பது பற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

சுகாதாரத் தரப்பு அறிக்கைகளின் பிரகாரம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுலில் உள்ளது.

களுத்துறை, புத்தளம் மாவட்டங்களில் நிலைமை சற்று சீராகி யிருப்பதால் அந்த இரண்டு மாவட்டங்களையும் தவிர்த்து இப்போதும் அச்சுறுத்தல் உள்ள கொழும்பிலும், கம்பஹாவிலும் ஊரடங்குச் சட்டத்தை தொடரலாமாவென அரசு யோசனை செய்து வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஊரடங்குச் சட்டம் மற்றும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது தொடர்பில் அரசின் அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# தடுப்பு மையங்களிலிருந்து 378 பேர் வீடுகளுக்கு விடுவிப்பு

## 55 ஆவது படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 10

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 378 பேர் நேற்று அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் 19 தொற்றுக் காரணமாக தென்பகுதியிலிருந்து தனிமைப்படுத்துவதற்காக வடக்கு நோக்கி அழைத்து வரப்பட்டவர்களில் ஒரு தொகுதியினர் நேற்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் 55 ஆவது படைப்பிரிவின் கொடிகாமம் விடத்தற்பளை பகுதியிலுள்ள இராணுவ முகாமில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த 298 பேரும் இயக்கச்சியில் தனிமைப் படுத்தப்பட்டிருந்த 80 பேரும் என மொத்தமாக 378 பேர் தனிமைப்படுத்தலில் இருந்து விடு விக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட பிரிசோதனைகளில் கொவிட் 19 க்கான தொற்றுக்கள் அடையாளம் காணப்படவில்லை. அதனால் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று 55 ஆவது படைப்பிரிவின் பிரிகேட் கொமாண்டர் மேஜர் ஜேனரல் சம்பத் தெரிவித்தார். (கு-6)





# சித்திரா பௌர்ணமி விசேட வழிபாடுகள்

வவுனியா, மே 10

இந்துக்களின் புனித தினங்களில் ஒன்றான சித்திரா பௌர்ணமி தினமான கடந்த வியாழக்கிழமை வவுனியா கருமாரி அம்மன் கோவிலில் விசேட வழிபாடுகள் நடைபெற்றன.

ஆலயத்தின் பிரதம குரு பிரபாகரக்குருக்கள் தலைமையில் விசேட அபிசேகங்களும் பூஜைகளும் நடைபெற்றிருந்தன.

அமரத்துவமடைந்த தாயை எண்ணி விரதமிருந்து அந்த ஆத்மாவுக்காகப் பூஜை நடத்தி தமது கடமைகளை நிறைவேற்றுவது இந்தத் தினத்தின் விசேட அம்சம். (கு-110)

## நடமாடும் வங்கிச் சேவை

முல்லைத்தீவு,மே 10
நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தேசிய சேமிப்பு வங்கி தனது நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளது.
தேசிய சேமிப்பு வங்கியின் முல்லைத்தீவுக் கிளை நடமாடும் வங்கிச் சேவையை இன்று ஞாயிற்றுக்கிழமை மாங்குளம், மல்லாவி, துணுக்காய் உட்பட்ட பகுதிகளில் நடத்தவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொழும்பு நீதிமன்ற வழக்குகள் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 10
கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நாளை திங்கட்கிழமை விசாரணைக்கு வரவிருக்கும் அனைத்து வழக்குகளும் மறு அறிவித்தல் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.
கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்கால நீதிமன்ற நடவடிக்கைகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பதை மாவட்ட நீதிபதி நாளை தீர்மானிப்பார் என்று கொழும்பு சட்டச் சங்கத்தின் தலைவர் விஜய கமகே தெரிவித்துள்ளார். (க)

# மன்னார் நகர அபிவிருத்திக்கு 550 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

**மன்னார், மே 10**
**ஆசிய அபிவிருத்தி வங்கியின் 550 மில்லியன் ரூபா நிதியில் மன்னார் நகரப்பகுதியில் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மன்னார் நகர சபைத் தலைவர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.**



நூறு கடைத் தொகுதிகள், வாகனத்தரிப்பிடம், செயற்கை நீர் வீழ்ச்சி, பார்வையாளர் அரங்கு, சுப்பர் மார்கெட் அதனுடன் இணைந்த திரையரங்கு, கே.எப்.சி உணவகம் போன்றவை நிர்மானிக்கப்படவுள்ளன.
இதற்கான முதற்கட்ட வேலைத் திட்டம் மன்னார் நகர சபையால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய சைனா பஜார் பகுதியில் இதுவரையில் அமைக்கப்பட்டிருந்த கடைத்தொகுதிகள், தற்காலிக கொட்டகைகள் அகற்றப்பட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் கையளிப்பதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.
இதற்காக மன்னார் சைனா பஜார் பகுதியைப் பயன்டுத்தி வந்த அனைத்து தரப்பினருக்கும் மாற்று இடங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று மன்னார் நகர சபைத் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன் மேலும் தெரிவித்தார். (க-213)



சிறகுகள் அமையம் ஊடாக எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம் மற்றும் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த 65 மாணவர்களுக்கு கற்றல் செயலட்டைகள் அவர்களது வீடுகளுக்கு நேரடியாகச் சென்று அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-23)

## குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு அதிகரிக்கலாம்

கொரோனா வைரஸ் மற்றும் உணவு விநியோகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தின் காரணமாக எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரிக்கக்கூடும் என்று இலங்கை ஊட்டச்சத்து நிபுணர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.
மேலும் கொவிட் 19 வைரஸ் மற்றும் ஊட்டச்சத்து குறித்து பலவிதமான தவறான கருத்துக்கள் பரவுகின்றன என்று குறித்த சங்கத்தின் தலைவரும் றுகுணு பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளருமான மருத்துவர் சந்திமா விக்ரமதிலக குறிப்பிட்டுள்ளார். (ப)



## கசிப்பு உற்பத்தி ஒருவர் கைது

கிளிநொச்சி, மே 10
உடுத்துறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டாரென ஒருவர் நேற்று முன்தினம்கைதுசெய்யப்பட்டுள்ளார்.
குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார், உற்பத்தி நிலையத்தை முழுமையாக அழித்ததுடன், இரண்டு பெரல் கோடா மற்றும் உற்பத்தி உபகரணங்களையும் கைப்பற்றினர்.
உற்பத்தியில் ஈடுபட்ட நபரையும் கைது செய்யதனர். குறித்த நபரின் மனைவி கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கசிப்பு உடமையில் வைத்திருந்தார் எனக் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.
அதேவேளை கைது செய்யப்பட்ட நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-6)



## பொலிஸ் நிலையத்தில் பிள்ளையார் சிலை

கிளிநொச்சி,மே 10
பளை பொலிஸ் நிலையத்தில் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ளது.
பொலிஸ் நிலையத்தில் பணிபுரிகின்றவர்கள் நாளாந்த வழிபாடுகளில் ஈடுபடக்கூடியவாறு பிள்ளையார் சிலை வைக்கப்பட்டுள்ளது.
இந்துக் குருக்களின் பூசை வழிபாடுகளுடன், பொலிஸ் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் சிலை வழிபாட்டுக்குத் திறந்து வைக்கப்பட்டது. (க-6)





வெசாக் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் பொதுமக்களுக்கு மதிய உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் தமது சொந்த நிதியில் இருந்து 1000 உணவுப் பொதிகளை சிறைச்சாலையை அண்டிய கிராம மக்களுக்கு வீடுவீடாகச் சென்று வழங்கினர். (ஐ-111)

# பப்பாசி மரங்கள் விசமிகளால் அழிப்பு

முல்லைத்தீவு உடுப்புக்குளத்தில் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த பப்பாசி மரங்கள் மற்றும் சில பயிர்களும் விசமிகளால் வெட்டி அழிக்கப்பட்டன.
உடுப்புக்குளத்தில் சூரிய மின்கலத்தில் விவசாயம் மற்றும் பழச்செய்கை மேற்கொண்டு வரும் விவசாயியுடைய பயிர்களே வெட்டி அழிக்கப்பட்டுள்ளன.
இது தொடர்பில் விவசாயி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளார்.
அதே கிராமத்தைச் சேர்ந்த இருவரை சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
தனிப்பட்ட முரண்பாட்டில், தோட்டத்துக்குள் புகுந்து பப்பாசி மரங்களை அடியோடு வெட்டிச் சாய்த்துள்ளனர். சுமார் 126 பயன்தரு பப்பாசி மரங்கள், முருங்கை மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டுள்ளன. நீர் பாய்ச்சும் பைப்புக்களும் துண்டு துண்டாக வெட்டப்பட்டுள்ளன.
விசமிகளின் இவ்வாறான செயற்பாட்டால் பல இலட்சம் ரூபா பெறுமதியான உற்பத்திப் பொருள்களை இழந்துள்ளேன் என்று விவசாயி தெரிவித்துள்ளார். (க-19)



## பாடசாலையில் கணினிப் பொருள்கள் திருட்டு

கல்லாறு அ.த.க பாடசாலையில் கணினிப் பொருள்கள் திருட்டுப் போயுள்ளன என்று தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
கடந்த வியாழக்கிழமை அதிபர் பாடசாலை சென்றுபார்த்தபோது கதவுகள் உடைக்கப்பட்டு கணினிப் பொருள்கள் திருட்டுப்போயுள்ளமையை அவதானித்துள்ளார்.
இது தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-113)

# கலைக்கப்பட்ட நாடாளுமன்று இறந்த உடலுக்குச் சமமானது

## இனி உயிர்கொடுக்க முடியாது என்கிறார் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல



**கொழும்பு, மே 10**

**கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் என்பது இறந்த உடலுக்கு ஒப்பானது. அவ்வாறு கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றை மீண்டும் கூட்டுவது இறந்த உடலுக்கு மீண்டும் உயிர்கொடுக்க எடுக்கும் சாத்தியமில்லாத முயற்சி. நாடாளுமன்றம் கூட்டப்படாது போனாலும் நிதி அதிகாரத்தைக் கையாள ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார், அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்த்தன.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றை மீண்டும் கூட்டுமாறு எதிர்க்கட்சிகள் கூச்சலிட்டாலும்கூட நாடாளுமன்றை மீண்டும் கூட்டும் எண்ணப்பாடு இல்லை.

சாத்தியமில்லாத விடயங்களை முன்னெடுக்க முடியாது. இறந்த நாடா ளுமன்றை மீண்டும் உயிர்ப்பிக்க முடி யாது. அதற்குப் பதிலாக புதிய நாடாளுமன்றம் கூட்டப்படுவதே ஆரோக்கியமான விடயம். இறந்த உட லுக்கு மீண்டும் எவ்வாறு உயிர்கொடுக்க முடியாதோ அது போன்றே பழைய நாடாளுமன்றைக் கூட்டவும் முடியாது.

நிதி விடயம் குறித்தே இப்போது எதிர்த்தரப்பினர் வாதிட்டுக்கொண்டுள்ளனர். ஆனால், அரசமைப்பில் நிதி அதிகாரம் ஜனாதிபதியால் கையாள முடியும் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளனர். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த நாடாளுமன்றம் கூடும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு அரச நிதி அதிகாரத்தை ஜனாதிபதி கையாள முடியும் என்று அரசமைப்பில் 150(3) ஆம் சரத்தில் கூறப்பட்டுள்ளது.

கடந்த நாடாளுமன்ற அமர்வுகளின் போது இடைக்காலக் கணக்கறிக்கை ஒன்றை முன்னெடுக்க எதிர்க்கட்சிகளிடம் நாம் அனுமதி கோரினோம். ஆனால் நாம் சர்வதேச நாடுகளிடம் அநாவசியமாக கடன் வாங்கவே அனுமதி கோருகிறோம் என்று எம்மீது குற்றம் சுமத்தி கணக்கறிக்கையைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுத்தனர். இப்போது மீண்டும் நாடாளுமன்றைக்கூட்டி நிதிச் செயற்பாடுகளைக் கையாள வேண்டும் என்கின்றனர்..

நாடாளுமன்றம் செயற்பாட்டில் இருந்த காலத்தில் இவர்கள் எமக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. இப்போது நாடாளுமன்றைக் கலைத்து நாம் தன்னிச்சையாக அதிகாரங்களைக் கையாள முடியும் என்ற சூழல் உருவாகியுள்ள நிலையில் ஜனாதிபதிக்கு நிதி விடயங்களைக் கையாள முடியும் என்ற அங்கீகாரம் உள்ளதால் இவர்கள் அரசைக் குழப்ப முயற்சிக்கின்றனர் - என்றார். (த)

---

## கொரோனாவால் இறந்த முஸ்லிம்களின் சடலங்களை எரிப்பது என்ற தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்யுங்கள்

*பணிப்பாளர் நாயகத்துக்கு உலமா சபை கடிதம்*

கொழும்பு, மே 10

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு உயிரிழப்போரின் சடலங்கள் தகனம் செய்யப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்பவும் 180 நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் முறைக்கு ஏற்பவும் மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தலைவர் மற்றும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களின் கையொப்பத்துடன் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எங்களது கோரிக்கையையும் ஏனைய சிவில் அமைப்புக்கள் மற்றும் துறைசார்ந்தவர்களின் கோரிக்கைகளையும் கருத்திற்கொண்டு தேவையான மாற்றங்களைச் செய்து அடக்கம் செய்வதற்கான அனுமதியுடன் மார்ச் மாதம் 27 திகதி 'கொவிட்19 சந்தேகத்துக்கிடமான மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளிகளைக் கையாளுதல் விடயத்தில் மருத்துவ நடைமுறை வழிகாட்டுதல்' என்ற ஆவணம் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டது.

என்றாலும் துரதிர்ஷ்டவசமாக மார்ச் மாதம் 31ஆம் திகதி மேலே குறிப்பிடப்பட்ட 'வழிகாட்டல்கள்' திடீரென்று திருத்தப்பட்டு எவ்வித விஞ்ஞான ரீதியான காரணங்களும் நியாயங்களும் முன்வைக்கப்படாமல் அடக்கம் செய்யப்படுவதற்கான அனுமதி நீக்கப்பட்டது.

அதிகாரிகளுடன் இது சம்பந்தமான விடயங்களை கலந்துரையாட மருத்துவர்கள் மற்றும் துறைசார்ந்தவர்களைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டது. உரிய அதிகாரிகளுடனான இந்தக்குழுவின் கலந்துரையாடல்களுக்குப் பின் இந்த விடயத்தில் ஒரு விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்த நிபுணர்களின் குழுவொன்றை நியமிக்க ஒப்புக் கொள்ளப்பட்டது. என்றாலும் அது நடைபெற்றதாகத் தெரியவில்லை.

உயிரிழந்தவரை தகனம் செய்யும் இந்த முடிவு நமது மதக் கொள்கைகளுக்கு எதிரானது என்பது மிகத் தெளிவான விடயம். இந்த விடயத்தில் மாற்றங்களைக் கொண்டுவரும் முயற்சிகள் துறைசார்ந்தவர்களின் உதவியுடன் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் என்பதையும் கூறிக்கொள்கின்றோம்.-என்றுள்ளது. (த)

---

## அதிவேக வீதிகள் திங்களன்று திறப்பு

கொழும்பு,மே 10

தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை உள்ளிட்ட ஏனைய நெடுஞ்சாலைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பொது மக்களின் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காகத் திறக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

திங்கட்கிழமை முதல் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மீண்டும் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று அரசு அறிவித்ததன் விளைவாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (க)

---

## விவசாயிகள், மீனவர்களுக்கு இந்தமாதம் ரூ.5,000 கொடுப்பனவு

கொழும்பு, மே 10

விவசாயிகள் மற்றும் மீனவர்களுக்கும் இந்தமாதம் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று விவசாய காப்புறுதிச் சபை அறிவித்திருக்கின்றது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கமைய இந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி ஓய்வூதியம் பெறும் விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தமக்குரிய தபால் நிலையங்களில் எதிர்வரும் 11, 12, 13, 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் இந்தக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்தமாதம் ஒரு லட்சத்து 62ஆயிரம் விவசாயிகள் மற்றும் 4ஆயிரத்து 907 மீனவர்களுக்கு ஓய்வூதியக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளன. இதற்கென்று 831 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் நாடு முழுவதுமுள்ள 4ஆயிரத்து 200 தபால் நிலையங்களூடாக வழங்கப்படவுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (த)

---

# ராஜபக்ஷவினர் பேராசையை கொரோனாவிலும் விடவில்லை!

## கொரோனா பற்றிய வரலாறு எழுதினால் ராஜபக்ஷக்களை முதலில் குறிப்பிடட்டாம்

கொவிட் 19 வைரஸ் பரவலை இலங்கை எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது என்று எதிர்காலத்தில் எழுதும்போது முதலாவது ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிடுவதுடன், இரண்டாவதாக பிரதமரின் பெயர் பதிவிடப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாட்டுக்குத் தேவையான தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அங்கொடை தேசிய தொற்றுநோய் மருத்துவமனையில்பணிபுரியும்தாதியர்களின் தங்குமிட வசதிப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்ட கட்டடத்திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தநிகழ்வில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கைகளைக் கழுவி, நபர்களுக்கிடையிலான இடைவெளியைப் பேணி வந்தாலே வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும்.

உலகத்தையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரசுக்கு அச்சமின்றி முகங்கொடுக்க இலங்கையால் முடியும் என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியவர்கள் மருத்துவக் குழுவினரே. இவர்களால்தான் நாட்டு மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷம், பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவும் பெரும் சேவையாற்றியுள்ளனர். மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைக்கமைய அவர்கள் தீர்மானம் எடுத்ததன் காரணமாகவே வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் அனைவரையும் தமது பிள்ளைகள் என்று விழிக்கும் சிறந்த தலைவர் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளார். எமக்கு சிறந்த எதிர்காலம் கிடைக்கும். தற்போதுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டைப் பாதுகாக்க முடியும் என்று எதிர்பார்ப்பதுடன், ஜனாதிபதியால் அதனை நிறைவேற்ற முடியும் என்றும் நம்புகின்றோம்- என்றார். (த)

---

## குளவிக் கொட்டுக்கு இலக்கான 14 பேர்

ஹற்றன்,மே 10

மலையகத்தில் பெருந்தோட்டத்துறையில் தொழில் புரிந்த 14 தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

பொகவந்தலாவை லொய்னோன் தோட்டத்திலுள்ள 5 ஆம் இலக்க தேயிலை மலையில், தொழில் செய்து கொண்டிருக்கையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் அவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் பொகவந்தலாவ மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். சிகிச்சைகளின் பின்னர் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-44)

# அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தைக் கடைப்பிடியுங்கள்

## பிரதி பொலிஸ் மா அதிபர் வேண்டுகோள்



கொழும்பு, மே 10

**ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் காலகட்டங்களில் வீட்டை விட்டு வெளியே செல்பவர்கள் அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் பிரகாரம் செல்ல வேண்டும் என பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.**

குறித்த விடயத்தைப் பின்பற்றாதவர்கள் ஊரடங்கு உத்தரவை மீறுபவர்களாக கருதப்படுவார்கள் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். நாளை திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்படவுள்ள நிலையில், தற்போது நடைமுறையில் உள்ள அடையாள அட்டையின் இறுதி இலக்க முறைமை தொடர்ந்தும் அமுலில் இருக்கும். இதனூடாக வாரத்தில் 5 நாள்களுக்கு மக்கள் அடையாள அட்டையின் பிரகாரம் வெளியேற முடியும் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார். (ப)



## 1,500 அரச பஸ்கள் மேலதிக சேவைக்கு

கொழும்பு,மே 10

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான ஆயிரத்து 500 பஸ்கள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மேலதிகமாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் என்று இலங்கை போக்குவரத்து சபை அறிவித்துள்ளது.

திங்கட்கிழமை முதல் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மீண்டும் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று அரசாங்கம் அறிவிப்பு விடுத்துள்ள நிலையில், பணியிடங்களுக்குச் செல்லும் ஊழியர்கள் நலன் கருதியே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பஸ்கள் மாவட்ட எல்லைக்குள் மட்டுமே சேவை யில் இருக்கும். மாவட்டங்களுக்கிடையில் போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் அனுமதி வழங்கினால், அதற்கேற்ப பஸ்களின் சேவைகள் தொடங்கப்படும் என்றும் சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை நிறுவனங்கள் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டணத்திற்கிணங்க ஊழியர்களைக் கொண்டு செல்ல பஸ்களை வழங்கவும் இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 426 பஸ்கள் தற்போது நாடு முழுவதும் மருத்துவ ஊழியர்களின் நலன் கருதி சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டாலும், உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக மட்டுமே பஸ்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மேலதிக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என்றும் சபை மேலும் தெரிவித்துள்ளது. (க)

## நுகர்வோர் அதிகார சபையினர் நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

கொழும்பு,மே 10

அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்களுக்கு எதிராக சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலப்பகுதியில் அத்தியாவசியப் பொருள்களை அதிக விலையில் விற்பனை செய்த விற்பனையாளர்கள் தொடர்பில் 800க்கும் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த திசாநாயக்க தெரிவித்தார்.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதிக விலையில் பொருள்களை விற்பனை செய்யும் விற்பனையாளர்கள் தொடர்பில் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் சாந்த திசாநாயக்க மேலும் தெரிவித்தார். (க)

## ஸஹ்ரானின் பயிற்சி மையம் சோதனை

மட்டக்களப்பு,மே 10

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரியான ஸஹ்ரான் காசீம் பெண்களுக்குப் பயிற்சியளித்ததாகச் சந்தேகிக்கப்படும் இடம் பாதுகாப்பு அதிகாரிகளால் சோதனை செய்யப்பட்டது.

மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலிஸ் பிரிவின் ஆரையம்பதி செல்வாநகர் கிழக்கு பாலமுனைப் பிரதேசத்திலுள்ள வாடகை விடுதியொன்றே சோதனை செய்யப்பட்டது.

குற்றத்தடுப்புப் பிரிவு மற்றும் விஷேட அதிரடிப்படையினர் இந்த சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். குறித்த விடுதியின் காணி மற்றும் விடுதிக் கட்டடம் என்பன முழுமையாகச் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன. (ஐ)

## மருந்துப் பொருளுடன் வந்தார் புதிய இந்திய உயர்ஸ்தானிகர்

கொழும்பு, மே 10

இலங்கைக்கான புதிய இந்திய உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட கோபால் பாக்லே ஒரு தொகை மருந்துப் பொருள்களுடன் நேற்றுமுன்தினம் கொழும்பை வந்தடைந்தார். பரிந்துரைக்கப்பட்ட சுகாதார நெறிமுறைகளைக் கடைப்பிடித்தவாறு புதிய இந்திய உயர்ஸ்தானிகர் கடமைகளைப் பொறுப்பேற்கிறார் என்று கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திரம் மற்றும் தெற்காசியப் பிராந்தியத்தில் மிகவும் நெருக்கமான இரு அயல் நாடுகளுக்கும் இடையிலான நிலைபேறான நட்புறவு, கூட்டு ஒருமைப்பாடு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றின் அதியுயர் முக்கியத்துவத்தினைச் சுட்டிக்காட்டுவதாக தனக்கு வழங்கப்பட்ட பணி அமைவதாகவும், அத்தோடு கொவிட்19 தாக்கம் மற்றும் விநியோக மார்க்கங்களின் தொடர்ச்சியான ஸ்தம்பிதம் ஆகியவற்றின் காரணமாக உலகளவில் பல நாடுகள் மருத்துவப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டினை எதிர்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், நட்புநாடுகள் மற்றும் பங்காளிகளுடன் தனது வளங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான இந்தியாவின் தொடர்ச்சியான உறுதிப்பாடானது "உலகம் முழுவதும் ஒரே குடும்பம்" என்ற ஆணையின்மீதான இந்தியத் தலைமைத்துவத்தின் நம்பிக்கையுடன் இணைந்திருக்கின்றது என்றும் புதிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார் என கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

புதிய உயர்ஸ்தானிகருடன், இந்தியாவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நான்காவது தொகுதி மருந்துப் பொருள்களும் நேற்றுமுன்தினம் இலங்கையை வந்தடைந்தன. இந்தியாவிலிருந்து விசேட விமானம் ஒன்றின் மூலமாக 12.5 தொன்கள் நிறையுடைய ஒரு தொகுதி மருத்துவப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய மருந்துளே கொழும்பை வந்தடைந்ததாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்தது. (ப)

## நுவரெலியாவில் தயாராகின்றன 3 தனிமைப்படுத்தல் மையங்கள்

### மாவட்டச் செயலர் தகவல்

கொழும்பு, மே 10

நுவரெலியா மாவட்டத்தில் மூன்று தனிமைப்படுத்தும் நிலையங்களைத் தயார்ப்படுத்தி வருவதாக மாவட்டச் செயலர் ரோஹன புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதன்படி, நுவரெலியா, பத்தனை மற்றும் பொகவந்தலாவை ஆகிய பிரதேசங்களில், இந்தத் தனிமைப்படுத்தல் நிலையங்கள் தயார் செய்யப்படுகின்றன. குறித்த இடங்களில் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்காக இராணுவத்தினரின் உதவியோடு சிறப்பு வசதிகள் தயார் செய்யப்பட்டுள்ளன. பதுளை மாவட்டத்தின் தியத்தலாவ இராணுவ முகாம், தனிமைப்படுத்தல் நிலையமாகச் செயற்பட்டு வருகின்றது. அதனைத் தவிர்த்து ஏனைய தனிமைப்படுத்தல் நிலையங்கள் எதுவும் இதுவரையில் தெரிவு செய்யப்படவில்லை என்று மாவட்டச் செயலர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நுவரெலியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் அல்லது சந்தேகத்தின் பேரில் சிகிச்சை பெறுபவர்களுக்காக, மஸ்கெலியா வைத்தியசாலை தயார்படுத்தப்பட்டு இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ப)

## கொவிட் 19 நிதியத்தின் இருப்பு 900 மில்லியனாக அதிகரிப்பு

கொழும்பு, மே 10

கொவிட் 19 சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் வருவாய் 900 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியம் கடந்த மார்ச் மாதம் 23ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

இலங்கை வெளியுறவு சேவை அதிகாரிகள் சங்கத்திடமிருந்து நேற்று ரூ .2.8 மில்லியன் தொகை பெறப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு, மேலும் பல நிறுவனங்களிடமிருந்தும் அன்பளிப்புகள் கிடை த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## வெசாக் தினத்தில் தானம் கையளிப்பு

முல்லைத்தீவு,மே 10

வெசாக் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தினரால் தானம் வழங்கப்பட்டது.

புதுக்குடியிருப்புப்பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி ஏ.அமரசிங்க தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து சீர்திருத்தத்துக்காக விடப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் உள்ள சிறுவர்களுக்கு உடுபுடவைகள் மற்றும் உலர்உணவுப் பொதிகள் என்பன வழங்கப்பட்டன. (ஐ-19)



# பெருந்துயர் துடைக்கும் கொடையாளர்கள்



லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நிதியின் ஊடாக, ஆசிகுளம் பகுதியில் ஊரடங்கால் தொழிலின்றி அன்றாட வருமானமிழந்து அல்லல்படும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளின் போசாக்கை மேம்படுத்தும் பொருட்டு 5 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் பால்மாவும் வழங்கப்பட்டன. (ம)



பருத்தித்துறை கற்கோவளத்தில் ஜே 406 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஊரடங்குச் சட்டத்தால் அன்றாடத் தொழிலை இழந்த 20 மீனவ குடும்பங்களுக்குத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஊடாக உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)



கொரோனாத் தொற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக இரவு, பகலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவப் பணியாளர்கள் உள்ளிட்ட மருத்துவத் துறையினரின் நன்மை கருதி சிவன் அறக்கட்டளை நிலையத்தினர் யாழிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளுக்கு முகக் கவசங்களை வழங்கினார்கள். (ம)



பிரித்தானியாவை தளமாகக் கொண்டு இயங்குகின்ற சிம்பியோசபி கல்வி மேம்பாட்டு நிறுவனத்தால், கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள காரைதீவைச் சேர்ந்த வருமானம் மற்றும் வாழ்வாதாரம் இழந்த 35 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் 50 அங்கத்துவக் குடும்பங்களுக்கு கிளிநொச்சி மக்கள் அமைப்பால் நிவாரணப்பொதிகள் வழங்கப்பட்டன. (ம)





மக்கள் நலன் காப்பகத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் சிவபுரம் கிராமத்தில் தற்போதைய கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்ட 100 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



இளவாலை சென். ஜுட் பகுதியில் வசிக்கும் சில குடும்பங்களுக்கு இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

# பெரும்துயர் துடைக்கும் கொடையாளர்கள்




ஆறுகால்மடத்தில் வதியும் 45 குடும்பங்களுக்கு புலம்பெயர் உறவுகளின் நிதி அனுசரணையுடன் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-23)




முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்க சுவிஸ் கிளை அமைப்பின் நிதியில் கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்ட 23 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)




வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் சண்முகராஜா சுஜனின் நிதிப் பங்களிப்பில் தற்போதைய அசாதரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட வவுனியா கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பதிவிலுள்ள வீரர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-23)




கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள அடம்பன் பிரதேச மக்களுக்கு, மன்னார் மடு மாந்தை மேற்கு கால்பந்தாட்ட சம்மேளனத்தின் வேண்டுகோளுக்கு அமைய நியூசிலாந்தில் வசிக்கும் புலம்பெயர் உறவான எடிசன் என்பவரால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ம)



கொரோனா வைரஸ் தாக்கத்தினால் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள கலைஞர்களுக்கு, கனடாவில் இயங்கிவரும் 'படைப்பாளிகள் உலகம்' எனும் அமைப்பால் உலர் உணவுப் பொதிகளும் தலா 2 ஆயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டது. (ம)



கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள 21 குடும்பங்களுக்கு முழுமதி சனசமூக நிலையத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (23)




கிளிநொச்சி மாவட்டம் விசுவமடு வள்ளுவர் பண்ணை கிராமத்தில் வசிக்கும் 25 குடும்பங்களுக்கு வள்ளுவர் பண்ணை ஆதி விநாயகர் விளையாட்டுக் கழகத்தால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம)




முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் சின்னச்சாளம்பன் கிராமத்தில் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வீடுகளில் முடங்கியிருக்கும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட பத்து குடும்பங்களுக்கு புலம்பெயர்ந்து சுவிஸில் வசித்துவரும் சுஸ்மினா என்பவர் உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளார். (ம)

# கொரோனா வைரஸ் விவகாரத்தில் சர்வதேச விசாரணைகள் வேண்டும்

## உலக சுகாதார நிறுவன மாநாட்டில் சீனாவுக்கு நெருக்கடி கொடுக்க முடிவு



**பீஜிங், மே 10**

**கொரோனா வைரஸ் விவகாரத்தில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனத்தின் மாநாட்டின் போது சீனாவுக்கு நெருக்கடி கொடுக்க உலகின் பல நாடுகள் முடிவெடுத்துள்ளன.**

சீனாவின் வுகான் நகரில் தோற்றம் பெற்ற கொரோனா வைரஸ் தற்போது உலகம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேசமயம் கொரோனா வைரஸை சீனா கட்டுப்படுத்திவிட்டது. அங்கு உயிரிழப்பும் குறைவு. ஆனால், உலக நாடுகளில் அமெரிக்காதான் அதிகளவில் பாதிக்கப்பட்டு முதலிடத்தில் உள்ளது.

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவியதும் சீனா மீது அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். "கொரோனா குறித்து உண்மைகளை சீனா மறைத்துவிட்டது. இதுகுறித்து விசாரணை நடத்த, அமெரிக்க நிபுணர்கள் குழுவை சீனா அனுமதிக்க வேண்டும். கொரோனா விவகாரத்தில் என்ன நடந்தது என்பதைக் கண்டறிவோம். வைரஸை வேண்டுமென்றே சீனா பரப்பியிருந்தால், கடும் பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். அதற்கு சீனா பதில் சொல்லியாக வேண்டும். இழப்பீடு தந்தாகவேண்டும்'' என்று ட்ரம்ப் ஆவேசமாக கூறினார்.

அவரது கருத்தை அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோவும் பல முறை கூறிவிட்டார். ஆனால், மற்ற நாடுகள் அமைதிகாத்து வந்தன. இந்நிலையில், ட்ரம்ப்புக்கு ஆதரவாக மற்ற நாடுகளும் தற்போது குரல் கொடுக்கத் தொடங்கிவிட்டன.

**சீனாவுக்கு எதிரான தீர்மானம்**

உலக சுகாதார நிறுவனத்தின் மாநாடு இன்னும் 10 நாட்களில் நடைபெற உள்ளது. அப்போது கொரோனா விவகாரத்தில் சீனாவின் நிலைப்பாட்டுக்கு எதிராக அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகள் தீர்மானம் கொண்டுவர முடிவெடுத்துள்ளன. அதன்படி தீர்மானத்தை தயாரிக்க பல நாட்டுத் தலைவர்கள் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையில் பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் பென் வாலஸ், சுவீடன் சுகாதாரத் துறை அமைச்சர் லீனா ஹாலன்கிரன் உட்பட பல நாடுகளின் முக்கிய பிரமுகர்கள் சீனாவின் நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பி உள்ளனர். இதனால் உலக சுகாதார மாநாட்டின் போது சீனாவுக்கு கடும் நெருக்கடி ஏற்படும் என்று தெரிகிறது. (ம)

## கொரோனாவால் ஆபிரிக்காவுக்கு பெரும் ஆபத்து

ஹராரே, மே 10

கொரோனா வைரஸ் ஆபிரிக்காவில் இனிவரும் நாள்களில் வேகமெடுக்கக் கூடும். இதனால் அங்கு சுமார் 2 லட்சம் பேர் கொரோனாவால் இறக்கக்கூடும் என்று எச்சரித்துள்ளது உலக சுகாதார அமைப்பு. எகிப்து, லிபியா, துனிசியா, மொராக்கோ, சூடான், சோமாலியா, எரித்திரியா, ஜிபூட்டி ஆகிய ஆபிரிக்க நாடுகளைத் தவிர்த்து 47 ஆபிரிக்க நாடுகளைக் கணக்கில் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இரண்டாம் உலகப் போரைவிட மிகப்பெரும் அழிவு கொரோனா

### ட்ரம்ப் வேதனை

வொஷிங்டன், மே 10

கொரோனா வைரஸ் தாக்குதல், இரண்டாம் உலகப் போரின்போது பியர்ல் துறைமுகம் மீது ஜப்பான் நடத்திய தாக்குதலை விட மோசமானது என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் வேதனையுடன் தெரிவித்தார்.

ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தாக்குதல், பியர்ல் துறைமுகத் தாக்குதலைவிட, உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை விட மோசமானது. அமெரிக்காவில் இப்போது நேர்ந்திருப்பது, இது வரை நேர்ந்திராத ஒன்று. இது போன்று ஒருபோதும் நடந்துவிடக்கூடாது. இதை சீனாவால் தடுத்திருக்கமுடியும். ஆனால் அதை செய்யவில்லை. துரதிர்ஷ்டவசமாக இதை நாங்கள் ஒரு போராகவே பார்க்கிறோம் என்றார்.

பியர்ல் துறைமுகத் தாக்குதல் என்பது 2ஆம் உலகப்போரின்போது, 1941ஆம் ஆண்டு டிசெம்பர் 7ஆம் திகதி அமெரிக்க கடற்படைத் தளமான ஹவாய் தீவின் பியர்ல் துறைமுகத்தின்மீது ஜப்பான் கடற்படை நடத்திய மோசமான தாக்குதலைக் குறிக்கும். இந்தத் தாக்குதலில் அமெரிக்காவின் 4 போர்க் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 188 போர் விமானங்கள் வீழ்த்தப்பட்டன. 2 ஆயிரத்து 400 அமெரிக்க கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர்.

உலக வர்த்தக மைய தாக்குதல் என்பது 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்க இராணுவத் தலைமையகம் பென்டகன் மற்றும் நியூயோர்க் உலக வர்த்தக மைய கட்டடம் ஆகியவற்றின் மீது பின்லேடனின் அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானங்களை மோதி கொடூர தாக்குதல் நடத்தி 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை கொன்று குவித்த தாக்குதல் ஆகும். (ம)



## ட்ரம்புக்கு தினமும் சோதனை



வொஷிங்டன், மே 10

வெள்ளை மாளிகையில் பணியாற்றிய இருவருக்கு கடந்த ஐந்து நாள்களில் கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து, அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கும் துணை அதிபர் பென்ஸுக்கும் ஒவ்வொரு நாளும் கொரோனா சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பில் ட்ரம்ப் தெரிவித்ததாவது:

கொரோனா தொற்றுக்கு ஆளான அந்த ராணுவ அதிகாரியுடன் தொடர்பில் இருந்தோம். இதனைத் தொடர்ந்து நானும், துணை அதிபர் மைக் பென்ஸும் கொரோனா பரிசோதனை செய்து கொண்டோம். நான் தினமும் கொரோனா தொற்றுப் பரிசோதனை செய்து கொண்டிருக்கிறேன். எனக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்படவில்லை. மைக் பென்ஸுக்கும் முடிவு சாதகமாக வந்துள்ளது' என்று தெரிவித்தார். (ம)

## வெள்ளை மாளிகைக்குள்ளும் பரவியது கொரோனா வைரஸ்

வொஷிங்டன், மே 10

அமெரிக்க அதிபர் ட்ரம்பின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகைக்குள் பணியாற்றும் இரண்டாவது நபருக்குக் கொரோனா தாக்கம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் அதிபர் ட்ரம்பின் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றும் சிப்பாய்களில் ஒருவருக்கு கொரோனா பாதிப்பு இருந்தது உறுதிசெய்யப்பட்டது. தற்போது துணை அதிபர் மைக் பென்ஸின் உதவியாளருக்கும் கொரோனாத் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுமார் 5 நாள்கள் இடைவெளியில் வெள்ளை மாளிகையில் பணியாற்றும் இருவருக்குக் கொரோனாத் தொற்று அவதானிக்கப்பட்டமை அமெரிக்காவையே பீதியடைய வைத்துள்ளது. (ம)



# விரைவில் வேண்டும் கிரிக்கெட்

*மிஸ்பா கோரிக்கை*

இஸ்லாமபாத், மே 10
தடைப்பட்டுள்ள கிரிக்கெட் போட்டிகள் மிக விரைவில் தொடங்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.
கொரோனா வைரஸ் தொற்றால் கிரிக்கெட் போட்டிகள் நிறுத்தப்பட்டுள்ளன. கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதிக்குப் பின்னர் ஆட்டங்கள் நடைபெறாததால் வீரர்கள் சுமார் இரண்டு மாதமாக வீட்டுக்குள்ளே முடங்கிக்கிடக்கிறார்கள். அவர்களின் உடற்தகுதி குறித்து கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.
அதேவேளை மக்கள் கொரோனா செய்திகளை மட்டுமே கேட்டுக் கேட்டு மன அழுத்தத்திற்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் விரைவில் கிரிக்கெட் போட்டிகளை தொடங்க வேண்டும் என பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளரும், தேர்வுக்குழுத் தலைவருமான மிஸ்பா உல் ஹக் விருப்பம் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து மிஸ்பா உல் ஹக் தெரிவித்ததாவது "தற்போதைய சூழ்நிலையில் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவேண்டும் என்று யாரும் நினைக்கமாட்டார்கள். ஒவ்வொருவடைய ஆரோக்கியமும் முக்கியமானது. அதற்குத்தான் முன்னுரிமை கொடுக்கவேண்டும்.
ஆனால், வெறிச்சோடிய மைதானத்தில் சரியான பாதுகாப்பு நடைமுறையுடன் போட்டிகளை நடத்த முடியும். எனக்கு அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.
தற்போது எல்லோரும் வீட்டில் முடங்கிக் கிடக்கிறார்கள். இந்த நேரத்தில் சில போட்டிகளை நேரடியாக ஒளிபரப்பினால் மக்கள் வீட்டிற்குள் இருந்து போட்டிகளை ரசிக்க முடியும். அவர்களுக்கு இது சிறப்பானதாக இருக்கும்.
வெறும் கொரோனா செய்திகளை மட்டுமே பார்த்துக்கொண்டு வீட்டில் இருப்பதன் மூலம் மக்கள் சோர்வடைந்து போவதுடன் மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள்.
இந்த நிலையில் விளையாட்டுகள் தொடங்கப்பட்டால், கிரிக்கெட் போட்டிகள் மீண்டும் தொடங்கினால் மக்கள் வீட்டில் இருந்து கொண்டே போட்டியை ரசிக்கமுடியும். இது அவர்களுக்குச் சிறந்த ஆறுதலைக் கொடுக்கும்"- என்றார். (ம)

# பார்சிலோனா அணிக்கு திரும்புகின்றார் நெய்மர்

## மாதத்தில் 36 கோடி ரூபா ஊதிய இழப்புக்கு சம்மதம்

மட்ரிட், மே 10
பார்சிலோனா அணிக்கு மீண்டும் திரும்புவதற்காக தனது மாதச் சம்பளத்தில் 36 கோடி ரூபாவை இழக்க நெய்மர் சம்மதித்துள்ளார் என்று தகவல்கள் வெளிவந்துள்ளன.
பிரேசில் நாட்டைச் சேர்ந்த கால்பந்து வீரர் நெய்மர் உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவராக உள்ளார். இவர் கடந்த 2017ஆம் ஆண்டு பார்சிலோனா அணியில் இருந்து பி.எஸ்.ஜி அணிக்கு மாறினார். கால்பந்து வரலாற்றில் அதுவரை இல்லாத அளவிற்கு 198 மில்லியன் பவுண்டுக்கு பி.எஸ்.ஜி அவரை வாங்கியது.
பார்சிலோனா அணி நெய்மரின் மாற்றத்தைத் தடுக்க எவ்வளவோ முயன்றது. ஆனால் நெய்மர் வெளியேறுவதில் உறுதியாக இருந்ததால் வேறு வழியின்றி அவரை விடுவித்தது. பிஎஸ்ஜி அவருக்கு போதுமான அளவிற்கு சம்பளம் கொடுத்தாலும் பார்சிலோனா அணியில் விளையாடிய அளவிற்கு நெய்மருக்குப் புகழ் கிடைக்கவில்லை. இதனால் மீண்டும் பார்சிலோனா அணிக்குத் திரும்ப முடிவு செய்தார். நெய்மர் வருவதை மெஸ்சியும் வரவேற்றார்.
ஆனால் பிஎஸ்ஜி நெய்மரை விடுவிக்க மறுப்பு தெரிவித்ததால் சிக்கல் ஏற்பட்டது. இருந்தாலும் பார்சிலோனாவுக்கு செல்லும் முயற்சியில் உறுதியாக உள்ளார்.
ஆனால் பிஎஸ்ஜி சம்பளத்தை அதிகப்படுத்தி அவரை தக்க வைத்துக் கொள்ள நினைக்கிறது. தற்போது மாதத்துக்கு 72 கோடி ரூபாவை பிஎஸ்ஜி ஊதியமாகக் கொடுக்கின்றது.
ஆனால் பார்சிலோனா அணி அவருக்கு 36 கோடி ரூபாவைத்தான் ஊதியமாகக் கொடுக்க முடியும் என்று அறிவித்துள்ளது. எனினும் ஊதியக் குறைப்புக்குச் சம்மதம் தெரிவித்து அணி மாற்றத்துக்குத் தயாராக உள்ளாராம் நெய்மர். (ம)



# அப்ரிடியின் 'லெவன்'



இஸ்லாமபாத், மே 10
கிரிக்கெட் உலகில் தவிர்க்க முடியாத இரண்டு ஜாம்பவான்களுக்கு பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடி தனது உலக அணியில் இடம்கொடுக்க மறுத்துள்ளார்.
பாகிஸ்தான் அணி கடந்த 1992ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியது. அப்போது இம்ரான் கான் அந்த அணிக்குத் தலைவராக இருந்தார். இந்தியாவின் ஜாம்பவான் சச்சின் ஆறு உலகக்கிண்ணத் தொடர்களில் விளையாடியுள்ளார். 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத்தை இந்தியா வென்றது. அந்த அணியில் சச்சின் இடம் பிடித்திருந்தார். ஆசிய கிரிக்கெட்டை இருவரையும் தவிர்த்துவிட்டுப் பேசிவிட முடியாது. ஆனால் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடி, எல்லா காலக்கட்டத்திலும் சிறந்த உலக லெவன் அணியைத் தேர்வு செய்துள்ளார். அதில் இருவருக்கும் அவர் இடம்கொடுக்கவில்லை. சயீத் அன்வர் மற்றும் கில்கிறிஸ்ட் ஆகியோருக்கு ஆரம்ப வீரர்களாக இடம் வழங்கியுள்ளார். இரண்டு முறை உலகக் கிண்ணத்தை வென்ற பொண்டிங்கை மூன்றாவது இடத்துக்குத் தேர்வு செய்துள்ளார். விராட் கோலி மற்றும் இன்சமாம் உல் ஹக் ஆகியோரை அடுத்த இரண்டு இடங்களுக்குத் தெரிவு செய்துள்ளார். தென்னாபிரிக்காவின் கலீஸை சகல துறை வீரராகத் தேர்வு செய்துள்ளார். வாசிம் அக்ரம், கிளென் மெக்ராத், சொயிப் அக்தர் ஆகியோரை வேகப்பந்து வீச்சாளர்களாகத் தேர்வு செய்துள்ளார். ஷேன் வோர்ண் மற்றும் சக்லைன் முஷ்டாக் ஆகியோரை சுழற்பந்து வீச்சாளர்களாகத் தேர்வு செய்துள்ளார். (ம)

# ஒலிம்பிக் தொடர்களில் கிரிக்கெட் சாத்தியமா?

*மோர்கனின் பரிந்துரை இது*

லண்டன், மே 10
ஒலிம்பிக் தொடர்களில் கிரிக்கெட் ஆட்டங்கள் இடம்பெற வேண்டும். நேரகாலத்தைக் கருத்தில்கொண்டு 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டங்களை நடத்தலாம் என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்துக்கு முதலாவது உலகக்கிண்ணத்தை வென்று கொடுத்தவரான இயன் மோர்கன்.
மோர்கன் மேலும் தெரிவித்ததாவது:
ஒலிம்பிக் மற்றும் காமன்வெல்த் விளையாட்டு போன்றவற்றிற்கு 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் பொருத்தமானதாக இருக்கும். மற்ற வகை கிரிக்கெட்டைவிடவும் 10 பந்துப் பரிமாற்றங்கள் இந்த வாய்ப்பை வழங்குகிறது. ஒட்டுமொத்த போட்டியையும், 10 நாட்களில் முடித்துவிடலாம். இதன்மூலம் கிரிக்கெட்டுக்கு கூடுதலான வாய்ப்புகள் கிடைக்கும். 8 முதல் 10 நாட்களில் முடிவடைகிற போட்டிதான் எல்லாவற்றிற்கும் ஏற்றதாக இருக்கும். மேலும் அதிக பொழுதுபோக்கையும் ரசிகர்களுக்கு அளிக்கும் - என்றார். (ம)



# அடுத்த மாதத்தில் லா லிகா தொடர்!

மட்ரிட், மே 10
ஸ்பெயின் கால்பந்து லீக்கான 'லா லிகா' அடுத்த மாதம் தொடங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.
கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக ஸ்பெயினில் நடைபெற்று வந்த புகழ்பெற்ற 'லா லிகா' லீக் கால்பந்துத் தொடர் தற்போது பிற்போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஸ்பெயின் அரசு ஊரடங்கில் பல்வேறு தளர்வுகளை கொண்டு வந்துள்ளது. இதனால் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அணிகள் மீண்டும் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளன. அடுத்த மாதம் மீண்டும் தொடர்கள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெற் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.